குறிப்புரை : பொன்னூர் என்கிற அழகிய சோழநல்லூர் ஊரிலுள்ள திருச்சோற்றுத் துறை என்கிற ஊரைச் சார்ந்த சோற்றுப் பிள்ளை என்பவன் தானமளித்துள்ளச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பெ–
2. ருஞ்சிங்க தேவற்கு
3. யாண்டு உ௰க வது பெ–
4. பான்னூரான அழகி–
5. கியசோழ நல்லூ–
6. ர் அருவந்தை ஆண்–
7. டாரான திருச்சோற்று–
8. த்துறையுடையான்
9. சோற்றுப் பிள்ளையே–
10. ன் மேற்படியூர் திரு–
11. வடிப்பிடிப்பான் உறப்–
12. பொன்தான் அழகியபட்ட–
13. னுள்ளிட்டாரோம் இவ–

14. ர் பக்கலிவ்வாண்டை

15. தை மாத மிவ்வூரார் கல்

16. வெட்டி . . .

17. . . . . .

18. வை வில்லவ–

19. ராயன் எழுத்து

20. இவை அதிய–

21. மான் எழுத்து

22. இவை நாட்டு–

23. க் கணக்குச்

24. செழியதரை–

25. யன் எழுத்து

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	: 7
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: –
ஊர்	: பொன்னூர்	இ.க. ஆண்டறிக்கை:	1928–29/415
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்:	26
அரசன்	: மாறவர்மன் விக்கிரம பாண்டியன்		
இடம்	: ஆதிநாதர் கோயில் முன் மண்டப கிழக்கு குமுதம்.		

குறிப்புரை : ஆதிநாதர் பள்ளிவிளாகத்தில் குடியேறுகின்ற குடிகள், நெசவு செய்கின்ற தறிகள் மீதான வரிகள் மற்றும் காசாயகுடிமக்களிடம் வசூலிக்கப்படும் வரிகள் அனைத்தையும் ஸ்ரீகோயில் ஆதிநாதர் பள்ளிச்சந்த உடையார் கோயில் பூசைக்கும், திருப்பணிக்கும் வழங்கிட விடார் பற்று நாட்டவர் அனுமதித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மர் திரிபுவனச் சக்ரவத்திகள் விக்ரம பாண்டிய தேவற்க்கு யாண்டு எ வது பொன்னூர் ஸ்ரீகோயில் ஆதிநாதர் பள்ளிச்சந்த உடையார் . . . . தென்பாற்கெல்லை . . . வடக்கும் மேல்பாற்கெல்லை மேலை . . . . கிழக்கும் வட்ட . . .
2. கெல்லை பள்ளியுடையார் மனைக்கும் ஊர் மனைப் படப்பைகளுக்குத் தெற்கும் இன்னால் எல்லைக்கு உட்பட்ட பள்ளி விளாகம் இவ்வாண்டை முதல் ஏறும் குடியும் தறியும் மற்றும் ஏறும் காசாயக்குடிமக்கள் பேரில் கடமையும் இவ்வாண்ட்டை மாசி மாத முதல் இன்னாயனார்க்குப் பூசைக்கும் திருப்பணிக்கும் உடலாக விட்டோம் விடார் பற்று நகரத்தோம் . . .

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 218/2018

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	–
ஊர்	:	பொன்னூர்	இ.க. ஆண்டறிக்கை:		1928–29/413
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	விசயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்:		27
அரசன்	:	திருவேங்கடராயர்			

இடம் : சிவன் கோயில் முன் உள்ள பலகைக்கல். திரிசூலம், சந்திரன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

குறிப்புரை : மாளவச் சக்கரவத்தியின் முகவரான கடவபிள்ளை உள்ளிட்ட கோயில் நிர்வாகிகள், பொன்னூர் பற்று நாட்டு நிர்வாகத்தினர் பொன்னூர் பராசரிசுரமுடையார் கோயிலுக்கு தேவதானமான வீரநாராயணன் தெருவில் குடியேறும் குடிகள் மீதான வரிகளை நீக்கி, கோயில் பண்டாரத்தில் ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவ-
2. வத்திகள் ஸ்ரீவீரபாண்டிய தே-
3. வர்க்கு யாண்டு யவது க-
4. ார்த்திகை மாதத்து ஒரு நாள் உடை-
5. யார் மாளவச் சக்கரவத்திகள் காரி-
6. யத்துக்கு கடவ பிள்ளை
7. உள்ளிட்ட கநதாரும் பொன்னூர்-
8. பற்று நாட்டவரும் பொன்னூ-
9. ர் உடையார் ஸ்ரீபராசரிசுரமுடை-
10. டய நாயனார்க்கு முதல் அடங்-

11. க இறையிலியாக விட்ட இந்-

12. நாயனார் தேவதானம் [கோயிலுக்]-

13. கு மேற்கும் வடக்கும் குடி ஏறுந வீ-

14. ர நாராயணன் திருவீதியில் ஏறு-

15. ம் குடிக்கு கார்த்திகை மாதம் முத-

16. ல் ஓராட்டை நாளுக்கு அனைத்-

17. தாய இறையிலியாகவும் எதிரா-

18. மாண்டுக் கடமை . . .

19. காணிக்கை உள்ளிட்ட எப்பேற்ப்-

20. பட்ட வரிகளும் நாட்டு மரியாதியா-

21. ல் ஒன்று . . . இப்ப

22. ஊர்க்கடமை குடிமை உடையார் ஸ்ரீபராச்சரிச்-

23. சுரமுடைய நாயனார் சிபண்டாரத்துக்கு மு-

24. தல் அடங்கல் இறையிலியாக நாங்கள்

25. விட்டபடி இது செலவாக்கவும் இத்தெருவி-

26. லிருக்கும் . . . வர்களுக்கு சந்திராதி-

27. தவரையும் மானி[ய]மாகவும் அறுதியிட்டு-

28. க் குடுத்தோம் . . . வசூவத்தி

29. கள் காரியத்துக்கு கடவபிள்ளை

30. . . . பொன்னூர் பற்று நாட்டவரும்

மாவட்டம் :	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு :	–
வட்டம் :	வந்தவாசி	வரலாற்று ஆண்டு :	–
ஊர் :	பொன்னூர்	இ.க. ஆண்டறிக்கை:	–
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	–
எழுத்து :	கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு :	விசயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்:	28
அரசன் :	திருவேங்கடராயர்		
இடம் :	சமணக் கோயில்.		

குறிப்புரை : செயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து பொன்னூர் பற்று பிரிவில் உள்ள பொன்னூர் என்கிற வீரசிங்கராயபுரம் கோயில் இறைவன் தம்பிரனார் திருப்பிராமீசுரமுடையார் கோயிலில் பெறப்படும் வரிகளுக்கு விலக்களிக்கப்பட்டதாக தெரிகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மகா மண்ட–
2. லேசுரன் மேதினி மீசுர க–
3. ண்ட கட்டாரி சாளுவ ஸிதிரு–
4. வேங்கடராயர் பிறுதிவிராச்சிய–
5. ம் பண்ணி அருளா நின்ற
6. சகாத்தம் சூசா . . .
7. மேற் செல்லா நின்ற
8. . . .
9. . . .
10. . . .
11. . . . செய[ங்கொ]–

12. ண்டசோழ மண்டலத்து

13. வெண்குன்றக் கோட்டத்து

14. பொன்னூர் பற்று பொன்–

15. னூர் ஆன வீரநரசிங்கராய–

16. புரத்து உடைய தம்பிரான–

17. ார் திருப்பிராமீசுரமுடைய

18. நாயினாற்கு இந்த கோ–

19. யிலிலே கொள்ளுந் தி

20. சோடி சூலவரி

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	சகம் 1332
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1410
ஊர்	: வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை:		62/1908
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ், கிரந்தம்			
அரசு	: விஜயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்:		1
அரசன்	: பூபதிராயஉடையார்			
இடம்	: பிரம்மபுரீஸ்வரர் கோமில் முன் மண்டப வடக்குச் சுவர்.			

குறிப்புரை : மண்டல புருஷன் காங்கேயன் உள்ளிட்ட இருகாணியாளர்கள் (பணி உரிமை நிலம் பெற்றோர்) அவர்களது காணியாட்சி நிலமான புரவுவரி நல்லூர் ஊரிலுள்ள கழுதைமேட்டு நிலத்தினை 35 பணத்திற்கு கோமில் தானத்தார் மற்றும் கைக்கோளர் வழியாகக் கோமிலுக்கு விற்றுள்ள செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீமந் மஹாமண்டலேஸ்வரந் வீரவொக்கண உடையார் குமாரர் பூபதிராய உடையார்க்குச் செல்லாநின்ற சகாப்தம் ௲௩௱௩௰௨ன் மேல் செல்லா நின்ற
2. விகிறிதி வருஷம் கன்னி னாயற்று அபரபக்ஷத்து ஷஷ்டி ஸோம வாரத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக்கோட்டத்து இரும்பேடு நாட்டு வழுகூர் கலிகடிந்த சோழநல்லூர்
3. சேரி[1] . . . . மண்டல புருஷன் காங்கேயனும் இவ்விருவோம் எங்கள் காணி ஆட்சி ஆன –
4. புரவுவரி நல்லூரில் கழுதைமேட்டுக் கொல்லையில் நாலு த[ரி]சுக்கு நடுமுன் திருச்சூலத்தாபநத்துக்குட்பட்ட நிலத்தில் தேவதானம் பாதி நீக்கி எங்கள் திறப்பில் பாதி கொள்வாருளரோ என்று கூறி இமொழி கேட்டு இதன் எதிர்மொழி குடுத்தோர் இவ்வூர் ஆள் உடையார் திருமேனி [தண்டே]–

---

1. சிமெண்ட் பூசப்பட்டுள்ளது

5. சுரன் அருளிச் செயற்படிக்கு இவ்வூர் தானத்தாரும் கைக்கோளரும் விலைக்குறித்த நிலவிலை . . . கொள்வேன் என்று பிற்கூறப் பிற்கூறியயாரும் முற்கூறியாரும் இந்நில[ம்] கழுதை மேட்டுக்கொல்லையில் நாலு தரிசுக்கு நடுமுந்பு திருசூலத்தாபநத்துக்குட்பட்ட நிலம் உள்ளது நயினார் தேவதானப் பாதி

6. னீக்கி எங்கள் பாதிக்கு எம்மில் இசைந்த விலைப்பொருள் அன்றாட தன் நடக்கும் வாசிபடா நற் ய[1] ௩௰௫ இப்பணம் முப்பத்தஞ்சுக்கும் ஆதிஸஞெஸ்லூர விலையாக விற்று எங்கள் காணி ஆட்சி சாத்தனூர் பட்டிறைக்கு

7. விரோதி வருஷத்துக்கு நாங்கள் உழுத கடமைக்கு பூண்ட பணம் நீக்கிந நிலைக்கு இவர் கையில் வாங்கிக் கொண்டு செலுத்தி விற்று விலை பிறமாண[ம்] பண்ணிக் குடுத்தோம் இந்த நிலமும் நாயினார் திருநாமத்துகாணி உடன் சேத்து கொண்டு முன்பிலாண்டு சம்மதித்து சோடி சூலவரி உடனே இந்த நிலமு(மு)ட்பட இறுத்துக்–

8. கொள்ள கடவராகவும் இதுவே பொருள் மாவறுதி பொருட் செல . . .

1. பணம்

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 221/2018

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	14–ஆம் நூற்.
ஊர்	:	வழூவூர்	இ.க. ஆண்டறிக்கை:		–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	விசயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்:		2
அரசன்	:	–			

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபம், அர்த்தமண்டபம் மற்றும் கருவறை வடக்கு, மேற்குப் பட்டிகைகள்.

குறிப்புரை : சளுக்கிப் பற்று நாட்டவர்கள் திருவயனீச்சுரம் உடையார் கோயிலுக்கு 320 பணத்திற்கு ஒரு குறிப்பிட்ட நிலத்தை விற்றுக் கொடுத்துள்ளச் செய்தி. கல்வெட்டு முற்றுப்பெறாமல் உள்ளது.

கல்வெட்டு :

1. . . . பலம் . . . இந்த வழுவூரான கலிகடிந்த சோழ நல்லூர் நான் கெல்லைக்குட்பட்ட நஞ்சை நிலமும் புஞ்சை நிலமும் ஏரியும் ஏரி நீர்ப்பாச்சலும் . . . எப்பேர்பட்ட[ன]வும் . . . மனையும், மனைப் படப்பையும் நத்தமும் பறைதிடரும் பொதுவும் போதாகியலும் . . . விற்ற சாதனப்படி காணி நீங்கலாக நின்ற காணி ஆட்சி . .

2. புஞ்சை நிலமும் ஏரியும் ஏரி நீர்ப்பாச்சலும் மரமுங் கிணறும் ஏரிவாய்ப்புறவடையும் மற்றுங் கன்றுமேய்பாழும் மனையுமனைய் படப்பையும் நத்தமும் பறைதிடரும் பொதுவும் போதாகியலும் முன்னாட் காணி ஆளர் விற்ற சாதநப்படி காணி நீங்கலாக நின்ற காணி ஆட்சி உள்ளது [திரு]நாமத்துக்காணி ஆக விலைக்குறத் தரில் விலை தந்து கொள்வோம் என்று [மு]ற்கூற முற்கூறிய சளுக்குப்பற்று நாட்டவரும் பிற்கூறிய வழுகூர் ஆளுடையார் திருவயனீச்[சு]ரமுடைய னாயனார் ஸ்ரீசண்டேசுரனு[ம்] எம்மிலிசைந்த விலை[ப்] பொருள் அன்றாடக நடக்கும் வாசிபடாத நற்பணம் முன்னூற்றிருபது இப்பணம் முன் . . .

மாவட்டம் : திருவண்ணாமலை
ஆட்சி ஆண்டு : –
வட்டம் : வந்தவாசி
வரலாற்று ஆண்டு : 14–ஆம் நூற்.
ஊர் : வழுவூர்
இ.க. ஆண்டறிக்கை: –
மொழி : தமிழ்
முன் பதிப்பு : –
எழுத்து : தமிழ்
அரசு : விஜயநகரர்
ஊர்க் கல்வெட்டு எண்: 3
அரசன் : வீரபொக்கண உடையார்
இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபம், அர்த்தமண்டபம் வடக்கு, மேற்கு முப்பட்டைக் குமுதம்.

குறிப்புரை : முழுமையற்ற கல்வெட்டு. திருவயனீச்சுரமுடையார் கோயிலுக்கு நிலம் விற்கப்பட்டமை குறித்த ஆவணத்தின் ஒரு பகுதி.

கல்வெட்டு :

1. இதுவே விலையாவணமாவதாகவும் இதுவல்லது வேறு பொருள் [மாவறுதி]ப் பொருட் செலவோலை கா[ட்டவும்] வேறு என்று சொல்ல [கடவோமல்லா]தாகவும் இவற்கு இந்தக் காணி ஆட்சி . . . . . கடவதாகவும் இந்த காணி ஆட்சிக்கு எப்பேர்பட்ட . . . . . மெல்லைக்கலனு . .
2. . . . . ருளுறக் கைக்கொண்டு ஆவணக்களரிக் காட்டேற்றி கீழிகை செலக் கைக்கொண்டு விற்றுவிலை ஆவணம் பண்ணிக் குடுத்தோம் வழுகூரான கலிகடிந்த சோழ நல்லூர் . . . . திருவயனீசுரமுடைய நாயனார் ஸ்ரீ ஆதிசண்டேசுரனுர்க்கு . . . . னாற்கு சளுக்கிப் பற்று நாட்டவரே . . . ஸ்ரீவீரபொக்கண உடையாற்கு செல்லா நின்ற துந்துபிவருஷ . . . . . ர் சன்னதித்தெரு . . ந்த . . . . னான
3. . . . . தித்தவரைக்கு . . . த்தரன் எழுந்து இவை பெரு . . . . . ராயன் எழுத்து இவை . . . ன் எழுத்து இப்படிக்கு இவை சளுக்கி வண்ணக்கர் அருளன . . . . ராயனான . . . . . முதன் எழுத்து . . . வாசலழிவுக்கு . . . ழி பிள்ளை . . . திரு முன்பே திருக்க

4. . . . ழவராயன் எழுத்து இவை திணறு மா வாணாதராயன் எழுத்து . . . . சோழ பல்லவராயன் எழுத்து இவை

5. நாற்பத்தெண்ணாயிர பட்டனெழுத்து இவை ஆளுடையான் பட்டந் எழுத்து இவை கோயிற் கணக்கு சம்பூவராயப் பிரமராயர் எழுத்து இவை அபிமான பூஷணன் எழுத்து

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 223/2018

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	: 5
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: 13–ஆம் நூற்.
ஊர்	: வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை:	54/1908
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்:	4 I, II
அரசன்	: இரவிவர்மனான குலசேகரன்		
இடம்	: பிரம்மபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு மேற்கு, தெற்கு குமுதப்படைகள்.		

குறிப்புரை : சளுக்கிப்பற்று நாட்டவர் பார்வையில் இருந்த சாத்தனூர் காணி நிலங்கள் பயிர் செய்யும் காணியாளர் இல்லாமல் நெடுநாள் இருந்தமையால் அவை திருவக்னீசுரமுடையார் கோயிலுக்குத் திருநாமத்துக்காணியாக கொடுக்கப்பட்டன.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்கேழ்வி முன்னாக கோ இரவிபன்மர் ஆன திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலசேகர[தே]வற்கு யாண்டு ரு ஐஞ்சாவது துலா நாயற்று வௌவடு வக்ஷத்து த்ரிதியையும் சனிக்கிழமையும் பெற்ற அனிழத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு வழுவூர் ஆளுடையார் திருஅயனீஸ்வரமுடைய நாயனாற்கு சளுக்கிப்பற்று நாட்டவரோம் தண்டேசுர பெருவிலையாக விற்ற காணியாவது இக்கோட்டத்து இன்னாட்டுச் சாத்தனூர்

2. நெடுநாள்பட இவ்வூர் காணியாளர் இல்லாமல் புலத்தலையாய்க் கிடக்கையில் இவ்வூர் இந்நாயனாற்கு திருநாமத்துக்காணியாக இவ்வூர் நாற்பாற்கெல்லைக்குட்பட்ட நன்செய் நிலமும் புன்சை நிலமும் நத்தமும் ஏரியும் ஏரிநீற்கோளும் மரமுங் கிணறும் பொதுவும் . . . யும் மற்றும் எப்பேற்பட்ட பிராத்திகளுமுள்பட இவ்வாண்டை அற்பசி மாதமுதல் திருநாமத்துக் காணியாகக் குடுத்தோம் இவ்வூர் [ப]லதளி நீக்கி

3. கடமை ஆயம் பொன்வரி காசு கடமை காத்திகைப்பச்சை நாட்டு வரி த[றியி]றை தட்டார் பாட்டம் ஏரிமீன் . . . செக்குக் கடமை மாவடை மரவடை காசாயவற்கம் பலகுடியிறை வாசல்வரி மற்றும் எப்பேற்பட்ட கா[சாய]*ங்களும் இந்நாயனாற்கு ஸ்வ[ர்]மானியமாகக் குடுத்[தோம்] இப்படி திருநாமத்துக்காணி இறையிலியாகக் குடுத்த சாத்தனூற் வரும் கடமை குடிமை எப்பேர்பட்ட உபாதிகளும் நாட்டுக்கே பாரமாக இறுத்துக் குடுக்[க] கடவோமாகவும் இப்படி இந்நாயனாற்கு

4. இச்சாத்தனூர் திருநாமத்துக்காணி இறைஇலியாகச் சந்திராதித்தவரை செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் குடுத்தோம் ஆளுடையார் திருவயனீசுரமுடைய நாயனாற்கு சளுக்கிப்பற்று நாட்டவரோம் பணியால் இவை நாட்டுக்கணக்கு க. . . வேளான் எழுத்து இப்படிக்கு இவை பெருநகர் நிய . . கிழான் பல்லவராயன் எழுத்து இப்படிக்கு இவை விதி[னூர்]ச் செம்பியதரையனெழுத்து இப்படிக்கு இவை சளுக்கி வண்ணக்கன் வணிகராதித்தன் எழுத்து

5. இப்படிக்கு இவை மங்கல நல்லூர் கொ[ந்]தை களப்பாளராயன் எழுத்து இப்படிக்கு இவை குவளைக் குலோத்துங்கப் பல்லவராயன் எழுத்து இப்படிக்கு இவை கிணறு மாபெருங் கறவூர் கிழவன் சுந்தரப்பெருமாள் எழுத்து இப்படிக்கு இவை [ஆ]கயாற்றூர் கண்ணந்தை விக்கிரமசோழப் பல்லவரையன் எழுத்து இப்படிக்கு இவை பெருநகர் கொஞ்ஞை வளவன் மூவேந்த வேளான் எழுத்து இப்படிக்கு இவை விதிநூர்

6. இவை விசைய பாலன் எழுத்து இப்படிக்கு இவை புத்துழான் வயிராவணன் எழுத்து

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	: 27
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1204
ஊர்	: வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை:	51/1908
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்:	5
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: பிரம்மபுரீஸ்வரர் கோயில் கருவறை அர்த்த மண்டப குமுதம்.		

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு வழுகூர் திருவயனீசுரமுடையார் கோயில் திருமடைவிளாகத்தில் வசிக்கும் தேவரடியார் உமை என்பவளின் மகன் காலகால தேவன் என்பவனிடமிருந்து இக்கோயில் சிவபிராமணர்கள் 18 காசுகள் பெற்றுக்கொண்டு திருவயனீசுரம் உடையார்கோயிலில் 6 சந்திவிளக்குகள் எரிப்பதாக சம்மதித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்திஸ்ரீ தி௫புவ]னச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவர்க்கு யாண்டு உ௰எ வது ஜயங்கொண்டசோழ மண்டலத்து
2. [வெ]ண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு வழுகூர் ஆளுடையார் திருவயநீசுரமுடைய கோயிலில் திருமடைவிளாகத்து இருக்கும் தேவரடியார–
3. ஈன உமை மகன் காலகாலதேவன் இன் நாயனாற்கு வைத்த சன்திவிளக்கு ஆறு இவ்விளக்காறுக்கும் இக்கோயில்க் காணியுடைய சிவ ஸ்ராஹ்மணரோங் கைக்கொ–
4. ண்ட நற்பழங்காசு ௰அ இப்பழங்காசு பதிநெட்டுங் கைக்கொண்டு இச்சந்தி விளக்காறுஞ் ஆசஞ்ராதிதவரை செலுத்தக்கடவோமிக் கோயிற்காணி உடைய சிவஸ்ராஹ்மணரோம்

மாவட்டம் : திருவண்ணாமலை

வட்டம் : வந்தவாசி

ஊர் : வழுவூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : –

அரசன் : –

ஆட்சி ஆண்டு : –

வரலாற்று ஆண்டு : 14–ஆம் நூற்.

இ.க. ஆண்டறிக்கை: –

முன் பதிப்பு : –

ஊர்க் கல்வெட்டு எண்: 6

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோமில் அர்த்த மண்டப மகாமண்டப தெற்கு மேற்கு பட்டிகை.

குறிப்புரை : மூன்று துண்டுக்கல்வெட்டுகள் 25 பணத்திற்கு குறிப்பிட்ட சில நிலங்கள் விற்கப்பட்டமை.

கல்வெட்டு :

1. [இப்படி]க்கு . . . ஓலை தந்து குடிநீங்காத் தேவதானமாக . . . .கள் இவர் மென்ன முற்கூறிய ஆதி சண்டேசுரனு[னு]ம் பிற்றையும் கோனார் . . .

II

1. உள்ளிட்டார்கு பாதியும் . . . த்தரையாரு பாதியும் ஆக எம்மிலிசைந்த [கு]ளிகை ய உயரு இப்பணம் இருபத்து அஞ்சுக்கும் ஏனாதித்தன் பெருஞ்செறுவும் மாதி செறுவும்
2. மாஞ்செறுவில் கிணறு பாதியும் இளைய நாயனார் தேவதான . . . காங்கேயன் பெருஞ்செறுவும் ஆக விலைக்கற விற்று பொருள் கைக்கொண்டு

III

1. . . ண்னுர் உள்ளிட்ட . . . காத்தரையற்கும் கோயிலில் ஆதி சண்டேசுரனே
2. . . . . தேவரடியாரில் நாவிலங்காத . . . . வாணிவசுரன் எழுத்
3. . . . . [குழி] ரு (ா)

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 226/2018

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	23
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1239
ஊர்	:	வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை	:	55/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
அரசன்	:	மூன்றாம் இராஜராஜன்			

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டப கிழக்குச்சுவர் இடதுபக்கம் (வடக்கு).

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு வழுகூர் திருவயனீசுரமுடைய நாயனார் கோமிலில் வைப்பதற்கு விளக்கு ஒன்றுக்கு 5 காசு வீதம் 4½ சந்திவிளக்குகளுக்கு 22½ காசுகள் இவ்வூரைச் சாந்த ஆண்டார் பொன்னம்பலக் கூத்தர் என்பவர் கொடையாகக் கொடுத்துள்ளார். இதனை இக்கோயிலைச் சார்ந்த மூன்று பிராமணர்கள் 5, 5, 12 காசுகள் வீதம் பெற்றுக்கொண்டு 4½ சந்திவிளக்கெரிக்க ஒப்புக்கொண்டுள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஶ்ரீ த்ரிபுவனச் சக்கரவர்த்திகள் ஶ்ரீராஜராஜதேவற்கு யாண்டு உ௰௩ ஆவது ஜயங்கொண்டசோழ மண்டலத்து
2. வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு வழுகூர் ஆளு[டையார்] திருவயநீசுரமுடைய னாயனாற்கு இவ்வூரில்
3. கும்பிட்டிருக்கும் ஆண்டார் பொன்னம்பலக் கூத்தர் பக்கல் இன்னாயனார் கோயில் ஶிவப்ராஹ்மணரில் காக்–
4. கு நாயகன் பட்டனான நாற்பத் தெண்ணாயிர பட்டன் கைக்கொண்ட பழங்காசு ரு ஐஞ்சுக்கு எரி[க்கு]ஞ் சந்தி
5. விளக்கு க ஒன்று திருக்காளத்தி பட்டன் பெருந்திருக்கோயிலுடையாளு மிவந் தம்பி திருவேகம்ப–

6. முடையானும் கைக்கொண்ட பழங்காசு ரு ஐஞ்சுக்கு எரிக்குஞ் சந்திவிளக்கு க ஒன்றும் ஆக விளக்-

7. கு இரண்டும் சந்ராதித்தவரை எரிக்க கடவோமிவ்மூவோம் காக்குனாயக பட்டன் திரு-

8. வேகம்பம் உடையான் மாதேவ பட்டன் கொண்ட பழங்காசு ய

9. பத்துக்கு எரிக்கும் சந்தி விளக்கு உ இரண்டும் வினாயகபட்டன் உடைய பி-

10. ள்ளை மகன் வினாயகனும் இவன் தம்பி கருணாகரனும் கைக்கொண்ட பழ-

11. ங்காசு உரு இரண்டரைக்கும் எரிக்கும் சந்திவிளக்கு [ரு] அரையும் வி-

12. ளக்கு உரு யும் சந்திராதித்தவரை எரிக்க கடவோம் யிம் மூவோம் இவ்விளக்கு சரு-

13. யும் இவ்வூர் நியாய[த்தார்]களில் ஆண்டார் பொன்னம்பலக் கூத்தர் தந்மம்

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	14–ஆம் நூற்.
ஊர்	: வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை:		52/1908
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	: விஜயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்:		8
அரசன்	: வீரவிருப்பண்ண உடையார்			
இடம்	: பிரம்மபுரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டப தென்சுவர்.			

குறிப்புரை : திருவயனீசுரம் உடைய நாயனார் கோயிலில் திருப்பணி மற்றும் பூசை சரிவர நடக்காமல் இருந்ததால் பொன்னி ஏந்தல், கீழை நத்தமேடு மற்றும் நீர் நிலைகள் உட்பட அனைத்தும் இவ்வூரைச் சார்ந்த காங்கயர் என்பவர் திருநாமத்துக்காணியாக விலைக்கு வாங்கி இக்கோயில் திருப்பணி மற்றும் செலவுகளுக்காக மேற்படி நிலங்களை வழுகூர் தானத்தார்க்கு விரிநீக்கி தானமாக வழங்கிய ஆணை.

கல்வெட்டு :

1. ஸுக்ஷய வருஷம் அற்பசி மாதம் ௨௰௨ வ ஸ்ரீஉகூ . . . சளுக்கிப்பற்று வழுகூர்த் தானத்தார்க்கு
2. நிருபம் தங்களூர் பொன்னி ஏந்தல் இன்னாள்வரையும் ஆளுடையார் திருவயநீசுரமுடைய னாயனாற்கு திருப்–
3. பணி பூசை பாதிஆய் நடக்கையில் இவ்வூர் காங்கயர் நம்முடைய ஊரில் பட்டிறைக்கு இந்த பொன்னேரி ஏ–
4. [ந்தல்] . . . திறப்பாகியும் தாங்கலும் கீழை நத்தமேடும் விலையாக விற்கையில் காங்கேயர் திரு–
5. நாமத்துக்காணியாக [கொண்டு சாதநம்] பண்ணிக் கொள்ளுகையில் இன்னாயனாற்கு பூசை திருப்பணிக்கு முத–

6. ல் இல்லாதபடியாலே இவர் விற்ற சாதநப்படி இந்த பொன்னி ஏந்தலும் தாங்கலும் கீழை நத்தமேடும் இவை அடங்–

7. கலும் ஸவ௨ரஊ இறையிலியாக குடுத்த அளவுக்கு இதுக்கு வேண்டும் குடியும் ஏற்றி வேண்டும் பயிரும் பயிற்செய்–

8. து கொண்டு இன்னிலம் வஜூாதித்தவரையும் நடத்திக் கொள்ளவும் . . . . இந்த யழஉழ இறக்கு–

9. வான் ஹஂகெ கரையில் பசுவைக் கொன்றான் பாவம் கொள்ளுவான் உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 228/2018**

மாவட்டம் : திருவண்ணாமலை

வட்டம் : வந்தவாசி

ஊர் : வழுவூர்

மொழி : தமிழ்

எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்

அரசு : விஜயநகரர்

அரசன் : வீரவிருப்பண்ண உடையார்

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டப தென்சுவர்.

ஆட்சி ஆண்டு : –

வரலாற்று ஆண்டு : 14–ஆம் நூற்.

இ.க. ஆண்டறிக்கை: 53/1908

முன் பதிப்பு : –

ஊர்க் கல்வெட்டு எண்: 9

குறிப்புரை : ஏனாத்தன் பிள்ளை மற்றும் பொன்னாங்கட்டி காங்கேயர் ஆகியோருக்கு சிறு உபயமாக விட்ட இக்கோயிலுக்குரிய தேவதானங்களில் 685 குழி நிலத்தினை 25 பணம் கோயில் பண்டாரத்தில் கொடுத்து குடிநீங்கா தேவதானமாக கோயிலுக்கு வழங்கப்பட்ட அரசாணை.

கல்வெட்டு :

1. திருவாய்க் கேள்வி முன்னாக ஸ்ரீவீரவிருப்பண்ண உடையாற்கு செல்லா நின்ற பிறமோதூத
2. வருஷம் அற்பசி ௴ உ௰எ தியதி இவ்வூர் ஏனாத்தன் பிள்ளை நாயின செம்பி–
3. யதரையற்கும் பொன்னாங்கட்டி காங்கேயற்கும் சிறுபாடாக விட்ட ஏனாதித்–
4. தன் குழி ௨ா௱ மாஞ்செறு குழி ௨ா௫௰ ஸோம நாயினார் தேவதானம்
5. காங்கேயன் பெருஞ்செறு குழி ௨ா௩௰௫ ஆக தடி ௩ குழி ௬ா௮௰–
6. ரு ம் எங்கள் பட்டிறைக்குமின் நாயினார்க்கு குடுத்து சீ பண்டாரத்திலே
7. இருபத்து அஞ்சு பணம் குடுத்து வேண்டின படியாலே இந்நிலம் குடிநீங் . . .

8\. . . .

மாவட்டம் : திருவண்ணாமலை

ஆட்சி ஆண்டு : –

வட்டம் : வந்தவாசி

வரலாற்று ஆண்டு : 14–ஆம் நூற்.

ஊர் : வழுவூர்

இ.க. ஆண்டறிக்கை: 61/1908

மொழி : தமிழ்

முன் பதிப்பு : –

எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்

அரசு : நாயக்கர்

ஊர்க் கல்வெட்டு எண்: 10&11

அரசன் : காங்கேயராயர்

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டப வடசுவர்.

குறிப்புரை : பொன்னி ஏந்தல் மற்றும் கீழ்நத்தமேடு ஊரிலுள்ள நிலங்களை சர்வமானியமாக ஏனாதித்தன், செம்பியதரையர் ஆகியோருக்கு மன்னன் வழங்கிய ஆணை.

பிரபவ வருடத்தில் செம்பியதரையன் மற்றும் காங்கேயராயருக்குக் கோயிலிருந்து சர்மான்யமாகத் தரப்பட்ட நிலங்கள் பிரமோதூத வருடத்தில் கோயிலுக்குத் திரும்பப் பெற்று அவர்களிடம் 25 பணம் திரும்பக்கொடுக்கப்பட்டுள்ளச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்ரீபூஜவ வஷுழ சித்திரை ட உய ரு ஸ்வஸ்திஸ்ரீ வழுகூர் ஆளுடைய திருவயநீஸ்வரமுடைய னாயனார் திருவாய்–
2. கேழ்வி முன்பாக ஆதிசணைஸ்வரரு இவ்வூர் ஏனாதிதந் பிள்ளையானாயன செம்பியதரையற்கும் மேற்படி
3. பொன்னாங்கட்[டி] காங்கேயராயர்கும் ஸவபூராநூ இறைமிலியாக நாம் ஓலை குடுத்தபடி நமக்குப் பொந்நி ஏன்தல்
4. பாதியும் ஏரி [கீழ்] நத்தமேடு . . . கிழக்கு . . . இறைமிலியாக . . . . க்கல்லும் வெட்ட . . . .
5. [வா]ங்கித்தந்தைமில் இவர்க்கு னாம் குடுத்த நம்முடைய [புலவரை] நல்லூரில் பாதிஇம் நம்முடைய நிலமாந மாஞ்செ–

6. ய்வில் வடபாதி பதினாலடிக் கோலாற் குழி [உ]ாருயம் ஏனாதித்தன் மேல்பாதி
ஈ ஊாம் ஆக ஈ சாருயம் வஞ்ராதித்தூ-

7. வரையும் ஸவபூராநூ இறைமிலியாகத் தந்த அளவுக்கு தான் வேண்டும் பயிர்ச் செயிது கொள்ளவும்

8. இவை நல்லகம் பட்டன் எழுத்து ஆளுடையான் பட்டந் எழுத்து இவை கோயிற் கணக்கு காங்கய ஸூஹூரா

9. யன் எழுத்து

II

1. பிறமாதுத வருஷம் அற்பசி ய உயஎ தியதி உடைஆர் ஆளுடையார்
2. திருவயனீசுரமுடைய நாயினார் எங்களுக்கு சிறுபாடு ஆ[க]* கல்லு வெட்டித்
3. தந்த மாஞ் செறுவும் ஏனாகிதனும் மாஞ்செறுகில் ஏற்றம் பாதியும் இளைய
4. நாயனார் தேவதானமான காங்கேயற் பெறுச்செறு . . .
5. சீ பண்டாரத்தில் பற்றின ய உயரு இப்பணம் இருபத்து அஞ்சுக்கும் இவை
6. செம்பியதரையன் எழுத்து இவை காங்கராயர் எழுத்து இவை
7. வார கணக்க காங்கேய பிரமராயன் எழுத்து

---

1. ஈ– குழி என்பதின் குறியீடு

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 230/2018

மாவட்டம் :	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு :	17
வட்டம் :	வந்தவாசி	வரலாற்று ஆண்டு :	பொ.ஆ. 1233
ஊர் :	வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை:	57/1908
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	–
எழுத்து :	கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்:	12
அரசன் :	மூன்றாம் இராஜராஜன்		
இடம் :	பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டப தென்சுவர்.		

குறிப்புரை : திருவயனீசுவரமுடையார் கோயிலில் செங்கேணி வீரப்பெருமாளான குலோத்துங்க சோழ சம்புவராயர் ஒரு நந்தாவிளக்கெரிக்க 32 பசுவும் 1 எருதும் கொடுத்துள்ளார். இவற்றைப் பெற்றுக்கொண்ட சீராளன் அயனீசுரக்கோன் மற்றும் பரம்பக்கோன் ஆகியோர் இராசகேசரி உழக்கால் நாள்தோறும் ஓர் உழக்கு நெய் கொடுப்பதாக உறுதியளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு ய[எ]ஆவது ஜயங்கொண்டசோழ மண்ட–
2. லத்து வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு வழுகூர் திரு[வ]யனீசுரமுடைய னாயனாற்கு செங்கேணி வீர–
3. ப் பெருமாளான குலோத்துங்கசோழச் சம்புவராயனேன் இநாயனாற்கு [திரு]நுந்தாவிளக்கு ஒன்றுக்கு விட்ட பசு மு–
4. ப்பத்திரண்டும் இஷபம் க ஒன்றும் இவூர் மன்றாடி பெரிய நாட்டுக்கோன் சீறா[ளன்] அயனீசுரக் கோனும் பரம்பக்கே–
5. ான் நங்கனான நாற்பத்தெண்ணாயிரக்கோனும் இவ்விருவோம் இப்பசு முப்பத்திரண்டும் இஷப–

6. ம் ஒன்றும் சாவாமூவாப் பெரும்பசுவாகக் கைக்கொண்டு இராசகேசரி உழக்காலே நாள் ஒன்–

7. றுக்கு உழக்கு நெய்யாக [அளக்க நெய்] சந்திராதித்தவரை அளக்க கடவோம் இ[வ்]விருவோம் இது[பன்மாஹேசுர] இரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 231/2018

மாவட்டம் : திருவண்ணாமலை
வட்டம் : வந்தவாசி
ஊர் : வழுவூர்
மொழி : தமிழ்
எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்
அரசு : சோழர்
அரசன் : மூன்றாம் குலோத்துங்கன்
இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டப தென்சுவர்.

ஆட்சி ஆண்டு : 17
வரலாற்று ஆண்டு : பொ.ஆ. 1195
இ.க. ஆண்டறிக்கை: 58/1908
முன் பதிப்பு : –
ஊர்க் கல்வெட்டு எண்: 13

குறிப்புரை : செங்கேனி வீரராக்கிதச் சம்புவராயன் புரவுவரி நல்லூர், பொன்னி ஏந்தல் ஆகிய ஊர்களிலிருந்து பெறப்படும் வரிவருவாய்களை திருஅயனீச்சுரம் உடையார் கோயில் திருப்பணிக்காகவும் அமுது படிகளுக்காகவும் வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவர்க்கு யாண்டு [ய]எ ஆவது ஜயங்கொண்டசோழ ம–
2. ண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு வழுகூர் திருவயனீச்சுரமுடையார்க்கு செங்கேணி வீரராக்கிதச் சம்–
3. புவராயனேன் புர[வு]வரி நல்லூர் பொன்னி ஏந்தல் உள்ளிட்டன தேவதானத்தில் கண்காணி மா நெல்லு சீகாரியப்பேறு காத்–
4. திகை காசு மடைவிளாகத்தில் தறி இறை எப்பேற்பட்ட ஆயங்கள் இந்நாயனார்க்கு திருப்பணி அமுது படிக்கு குடுத்தேன்
5. பல்லவன் வீரராக்கிதச் சம்புவராயனேன் இத்தன்மம் விலக்குவான் கெங்கை இடை குமரிஇடை சேத பாவம் கொள்வான்
6. இத்தன்மம் இறக்குவான்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 232/2018

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	: 2
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1180
ஊர்	: வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை:	–
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்:	14
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டப முப்பட்டைக் குமுதம்.		

குறிப்புரை : கல்வெட்டு முற்றுப்பெறவில்லை. வழுகூரைச் சேர்ந்த கூற்றனாதித்தன் என்பவர் அயனீசுரமுடையாருக்கு ஒரு சந்தி விளக்கு வைத்துள்ளச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்கசோழ தேவர்க்கு யாண்டு இரண்டா–
2. வது ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து
3. இரும்பேடு நாட்டு வழுகூர் ஆளுடையார் அயனீஸ்வரமுடைய்யார்க்கு இவ்வூர்க் கூற்–
4. றனாதித்தன் அரைசுத்[தே]தவநேன் வைத்த ஸந்திவிளக்கு ஒன்றுக்கு இக்கோயில் காணியுடைய

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 233/2018

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	17
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1195
ஊர்	:	வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை	:	60/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	15
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்கன்			
இடம்	:	பிரம்மபுரீஸ்வரர் கோமில் மகாமண்டபத் தெற்குச்சுவர்.			

குறிப்புரை : திருவயனீசுரமுடையார் கோமிலில் வெட்டி (இலவச/கட்டாய பணி) கூறு செய்கிற களப்பாளன் சாவகன், அம்மை அப்பசாவகந் உள்ளிட்டார் புவநி நல்லூர், தேவபெருநி விளாகம் ஆகியவற்றில் கிடைக்கும் வெட்டி, அரிமுக்கை ஆகிய வரி வருவாயைக் கொண்டு எரிக்க 2 விளக்குகள் கொடுத்துள்ளச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [திரிபு]வந சக்கரவத்திகள் சீ குலோத்துங்கசோழ தேவற்கு யா–
2. ண்டு ૧எ ஆவது ஜயங்கொண்டசோழ மண்டலத்து இரும்பேடு நா[ட்]*டு
3. வழுகூர் நாயனார்(ர்) திருவயனீச்சுரம் முடையார்க்கு வெட்டி கூறுசேகிற களப்பாளச் சாவ[க]–
4. னானே அம்மைஅப்ப சாவகந் உள்ளிட்ட நியாயத்தோம் இனாயநார் திருவயநீச்சுர–
5, முடையார்க்கு நாங்கள் வைச்ச(ச) திருவிளக்கு இரண்டுக்கும் இந்நாயநார் தேவதாநங்கள் புரவு–
6. வு[ரி]* நல்லூ[ர்]* தேவபெருநி விளாகமும் வெ[ட்]டி அரிமுக்கை விளக்கு இரண்டுக்கு விட்டோம்
7. கெங்கை இடை குமரிஇடை சேதன் பாவ(ா)ம் கொ[ள்]வாராக

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு :	38
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு :	பொ.ஆ. 1216
ஊர்	:	வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை:	59/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு :	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்:	16
அரசன்	:	திரிபுவனவீரதேவர் (மூன்றாம் குலோத்துங்கன்)		
இடம்	:	பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபத் தென்சுவர்.		

குறிப்புரை : புத்துழான் பெரியான் சம்புவராயப் பல்லவரையன் என்பவன் வழுகூர் திருவயனீசுரமுடையார் கோயிலில் வைத்த சந்திவிளக்கு ஒன்றுக்காக 3 காசுகள் கொடுத்துள்ளான். இக்கோயில் சிவபிராமணர் காசினைப் பெற்றுக் கொண்டு விளக்கெரிக்க ஒப்புக்கொண்டுள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்திகள் திரிபுவன வீரதேவற்கு யாண்டு ௩௰அ வது வழுகூர் ஆளுடையார் திருவய–
2. நீசுரமுடையாற்கு புத்தூழான் பெரியான் சம்புவராயப் பல்லவரையன் வைத்த சந்திவிளக்கு ௧ இச்சந்தி
3. விளக்கு ஒன்றுக்கும் இக்கோயில் ஶிவப்ராஹ்மணர் கைக் கொண்ட பழங்காசு ௩ இப்பழங்காசு மூன்றுங் கொ–
4. ண்டு இவ்விளக்கு ஒன்றும் சந்திராதித்தவரை எரிக்க கடவோம் இக்கோயில் ஶிவப்ராஹ்மணரோம் உ

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 235/2018

மாவட்டம் : திருவண்ணாமலை		ஆட்சி ஆண்டு	: 11
வட்டம் : வந்தவாசி		வரலாற்று ஆண்டு	: 13–ஆம் நூற்
ஊர் : வழுவூர்		இ.க. ஆண்டறிக்கை:	–
மொழி : தமிழ்		முன் பதிப்பு	: –
எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு : –		ஊர்க் கல்வெட்டு எண்:	17
அரசன் : –			

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபத் கிழக்குச்சுவர்.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. வழுகூர் திருவயனீசுரமுடையார் பற்றிய குறிப்பு மட்டும் காணப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் . . . . கர . . . . வற்கு யாண்டு . . . .
   யிக வது ஜயங்கொண்ட சோழமண்டலத்து
2. வெண்குன்ற கோட்டத்து . . . . வழுகூர் . . . திருவயனீசுரமுடையாற்கு
   இம்மண்டலத்து

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 236/2018

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	7
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1070
ஊர்	:	வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை:		56/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்:		18
அரசன்	:	வீரராஜேந்திரன்			
இடம்	:	பிரம்மபுரீஸ்வரர் கோமில் மகாமண்டப கிழக்குச்சுவர்.			

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழ மண்டலத்து காலியூர் கோட்டத்து மாகறல் நாட்டு ஆற்பாக்கம் ஊர்த்தலைவன் இளையாழ்வார் என்பாரின் மகன் துணைவர் என்பவரிடம் பெற்ற 150 கலம் நெல்லின் வட்டியிலிருந்து (பொலிசை) அயனீஸ்வரமுடையார் கோயிலில் திருபள்ளி எழுச்சி வழிபாடு செய்ய சிவபிராமணர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திரதேவர்க்கு யாண்டு எ வது ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோ–
2. ட்டத்து இரும்பேடு நாட்டு வழுகூர்த் திருஅயனீஸ்வ[ர]*முடையார் கோயில் [காணி]யுடைய ஸிவப்ராஹ்மணரோம் இம்மண்–
3. டலத்து[க்] காலியூர் கோட்டத்து மாகறல் நாட்டு ஆற்பாக்கத்து ஆற்பாக் கிழான் இளையாழ்வார் மகன் துணைவர் பக்கல் நாங்–
4. கள் இநா[ய]னார்க்குத் திருப்பள்ளிஎழுச்சிகுப்பையமாகப் பொலியூட்டுக் கைக்கொண்டு ஊ ாருய நெல்லு நூற்றைம்பதின் கலமும்
5. கைக்கொண்டு திருப்பள்ளி எழுச்சிக்கு நித்த நானாழி அரிசி திருஅமுது சந்திராதித்தவரை [செலுத்த]க் கடவோமாகவும் இச்சோறு நாங்களே கொண்
6. டு இச்சந்திக்கு திருவிளக்கு இட்டு நெய் . . .செலுத்தக் கடவோமாகவும் சந்தித்தோம் இக்கோயில் காணி உ . . .

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	13–ஆம் நூற்
ஊர்	: வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை:		–
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்:		19
அரசன்	: இராஜராஜன்			
இடம்	: பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபம் முன்சுவர்.			

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. 'ஸ்ரீ இராசராசதேவர்' என்ற குறிப்பு மட்டும் காணப்படுகிறது.

கல்வெட்டு :

1. திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இராஜராஜ தேவற்கு யாண்டு

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 238/2018

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	சகம் 1348
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1425–26
ஊர்	: வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை:		63/1908
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	: விஜயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்:		20
அரசன்	: ஸ்ரீகிரிநாதர்			
இடம்	: பிரம்மபுரீஸ்வரர் கோமில் முன்மண்டப வடக்குச்சுவர்.			

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு வழுகூரான கலிகடிந்தசோழ நல்லூர் திருவயனீசுரமுடைய நாயனார் கோமில் திருமடைவிளாகத்தில் குடியிருக்கும் கைக்கோளர், வாணியர், சேனைக்குடையர் ஆகியோரிடம் வசூலிக்கப்படும் பட்டடை, நூலாயம், வாசலில் பிறக்கும் பழவரி, புதுவரி போன்றவற்றிலிருந்து பெறப்படும் 70 பணமும், புடவை முதலுக்கு பெறப்படும் 10 பணம் சேர்த்து ஆக மொத்தம் 80 பணமும் கோமிலுக்கு வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. செக்குகள் மீதான பெறப்படும் வரியை திருவயனீசுரமுடைய நாயனார் கோமிலில் திருநந்தா விளக்கெரிக்க பயன்படுத்திக்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ௨ந ௨ஹா[மண்]டலீசுரன் அரியராய விபாடந பாஷெ–
2. க்கு தப்புவராயர கண்டன் மூவராயர கண்டன் ஸ்ரீவீரவிசைய–
3. பூபதிராயர் குமார சிரிகிரிநாத உடையற்கு செல்லா நின்ற ச(ஹ)காத்–
4. தம் ௲௩௱௪௰௮–இன் மேல் செல்லா நின்ற விசுவாசு வருஷத்து
5. [௨]கூ௭ நாயற்று பூறுவ ப(க்)ஷத்து திறையோதெசியும் திங்கள் கிழமை–
6. யும் பெற்ற திருவாதிரை நாள் ஜயங்கொண்டசோழ மண்–
7. டலத்து வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு

8. வழுகூரான கலி[கடிந்த]சோழ நல்லூர் ஆளுடைய நாயனார்

9. திருவயனீசுரமுடைய நாயனார் திருமடைவிளாகத்தில் கைக்கோளற்கும் கை–

10. ச்சே[ச] . . . ற்கும் வாணியர் செக்குப் பட்டடை ஆயத்துக்கும் சேனை[க்கு] . . .

11. . . . கும் பலபட்டடை . . மே(ல்)லே[று]ம்(க்) குடிகளுக்கும் பட்டடை நூலாயத்துக்கும்

12. . . . க்கும் . . . . பெற்கு பட்டை நூலாயத்து–

13. [க்]கு பட்டை ஆயப்பட்டைச்சம்[ப]ாதம் . . யச்சம்ம நம் குழி ப– ய–ம் அதிகை மாதம்

14. . . ம[ற்று]ம் ஆயத்தை நோக்கிப்பை . . வய . . வாசலில் பிறக்கும் பழவரி புதுவ–

15. ரி மற்றுமெப்பெற்ப்பட்ட சகல உபாதிகளும் முட்பட உபயங்கட்டுக் குத்தகை[க] வருஷ௨ [ஒ]ன்

16. றுக்கு கொள்ளு[ம்] பஎய ம் புடவை முதலுக்கு ப யம் ஆக ப[அய]ம் சந்திறாயித்தவரையும் வரு–

17. ஷம் வருஷம் தோறும் செலவறுக்க கடவர்கள் ஆகவும் செக்குபட்டடை ஆயம் சந்தை–

18. யில் வறுகிற முதலு[ள்ளது] திருவயனீசுவரமுடைய நாயனார் கோயிலுக்கு திரு நுந்தாவிள–

19. க்கு இடக்கடவார்கள் ஆகவும் இம்மதிகாரி சந்திறாயித்தவரையும் நடக்க ம–

20. ல்லர[ச][ர்]* உபையம் தனக்கெ[யிந்த] (யி)த்தருமத்து மேல்க[ா]த்து [மே]ல் வரு பிறதா–

21. னரும் சுகமே இருக்கவேணும் என்றும் ய[ர்]*மத்துக்கு கடவ[ர்]களுக்கேய் நாயக்கர் கல்–

22. லு வெட்டிக் கு[டுத்]தேன் இந்த கல்லு வெட்டுக்கு அகுதம் பண்ணினவர்கள் கெங்கை–

23. கரை[யி]*லே காராம்பசுவைக் கொன்ற பாவம் கொள்ளக்கடவராகவும்

24. அயன் பொற்கோயிலுடையராயரை சீபாதத்து தலைகார்க்க

மாவட்டம் : திருவண்ணாமலை
ஆட்சி ஆண்டு : சகம் 1490

வட்டம் : வந்தவாசி
வரலாற்று ஆண்டு : பொ.ஆ. 1568 நூற்.

ஊர் : வழுவூர்
இ.க. ஆண்டறிக்கை: 64/1908

மொழி : தமிழ்
முன் பதிப்பு : –

எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்

அரசு : விசயநகரர்
ஊர்க் கல்வெட்டு எண்: 21

அரசன் : சதாசிவதேவ மகாராயர்

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் காமரசவள்ளி அம்மன் சன்னதி முன்மண்டப தெற்குச் சுவர்.

குறிப்புரை : கிருஷ்ணப்ப நாயக்கரின் முகவரான சூரப்பநாயக்கர் என்பவர் வழுகூர் திருஅயனீசுரமுடைய நாயனார் கோயிலில் ஸ்ரீபலி, திருவிளக்கு ஆகியவற்றிற்கு தானம் வழங்கிய செய்தி. கல்வெட்டு சிதைந்துள்ளதால் தானத்தின் விவரம் தெரியவில்லை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி [।*] ஸ்ரீமன் மகாமண்டலேசுர சதாசிவதேவ மகாராயர் பிறுதிவி ராச்சியம் பண்ணி அருளா நின்ற
2. சகாற்தம் ௲சா[௯ல] இதன் மேல் செல்லா நின்ற விபவ சங்வற்சரத்து சிங்க நாயற்று பூறுவ பக்ஷத்து–
3. தெசமியும் சோமவாரமும் பெற்ற திருவோணத்து நாள் ஸ்ரீ௨௬ கூஷ்ணப்ப நாயக்கரய்யன் காரியத்துக்கு–
4. க்கற்தரான ஸ்ரீ௨௬ சூரப்ப நாயக்கர் ஸ்ரீகூஷ்ணப்ப நாயக்கரய்யன் . . . .
5. . . . . [வழுகூர்] திரு அயனீசுரத்து நாயனார் கோயிலில் ஸ்ரீபெலி
6. க்[கு]ம் . . . . த்துக்கும் ஒரு திருவிளக்குக்கும்

7. . . . . நாமத்துக் . . . . ருஷம் ஒன்று . . . . இ–

8. வை . . . . தினம் பிரண்டு நேரமும் எழு–

9. ந்தருள[ப் ப]ண்ணி . . . . தாகவும் . . . .

10. . . . .

மாவட்டம் :	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு :	–
வட்டம் :	வந்தவாசி	வரலாற்று ஆண்டு :	16–ஆம் நூற்.
ஊர் :	வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை:	65/1908
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	–
எழுத்து :	தமிழ்		
அரசு :	–	ஊர்க் கல்வெட்டு எண்:	22
அரசன் :	–		

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் பிரகார மேற்குச்சுவர்.

குறிப்புரை : வழுகூர் ஊரில் உள்ள நாயக்கர் பெருந்தெருவில் குடியேறும் குடிகளிடம் தறிக்கடமை, வாசல்ஆயம், ஊர் வினியோகம் ஆகியவற்றில் முக்கால் விழுக்காடு பெற்றுக்கொள்ளவும்; இராயன் தெரு, மேலைத் தெரு, கீழைத் தெரு போன்றவற்றில் குடியேறும் குடிகளுக்கு தறிக்கடமை, வாசல்ஆயம் போன்றவற்றிற்கு அரையே அரைக்கால் விழுக்காடு பெறவேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. [ஸ்ரீ] இரத்தாக்ஷி வருஷம் ஆ . . . .
2. தானத்தார் வடக்குத் தெருவி[ல்]* ந[டு]வெகச்சி . . ல . . .
3. நாயக்கர் பெருந்தெருவில் ஏறுகிற குடியளுக்கு தறி–
4. கடமை வாசல் ஆயம் ஊர் வினிே[வ]ாகம்
5. ஊரில் தறியில் ஒன்று முக்கால் கொள்ளக் கடவதாகவும்
6. தி . . . . தெ . . . . டை இராயன் பெருந்தெருவு ஞ்
7. [மே]மலை தெருவுக்கு . . . . . தெற் . . கிழக்கு தெ –
8. [ரு]வுமே ஏறுகிற குடியளுக்கும் தறிகடமை வாசல்–

9. ஆயம் அரையே அரைக்கா[ல்] தறி விழுக்காடு கொள்ளக் கடவது ஆகவும் இம் (ம)-

10. மதிகாரிக்கு[1] அகிதம் பண்ணினவர்கள் ஙங்கைக் கரையில் காராம் பசுவைக்-

11. கொன்ற பாவத்திலேபோவான் சந்திறாதித்தவரையும் நடக்கக்கடவது . . கச்சி அரைக்கு வ . . .

12. இவை நாற்பத்தெண்ணாயிர[பட்டர்] எழுத்து இவை ஸ்ரீவாஉதே[த]வ[2] ஹட்டர் எழுத்து

13. . . . ளற்கு . . . . தி அஹிஉாந ஹூஷண வேளான் எழுத்து

14. இவை கோயில் கணக்கு தண்டக நாட்டு வூஊராயன் எழுத்து [||*]

1. இம்மரியாதைக்கு என்று படிக்கவும்

2. வாஉதேவ

த.நா.அ. தொல்லியல் துறை		தொடர் எண் :- 241/2018

மாவட்டம் : திருவண்ணாமலை
ஆட்சி ஆண்டு : சகம் 1490

வட்டம் : வந்தவாசி
வரலாற்று ஆண்டு : பொ.ஆ. 1568

ஊர் : வழுவூர்
இ.க. ஆண்டறிக்கை: 66/1908

மொழி : தமிழ்
முன் பதிப்பு : –

எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்

அரசு : விசயநகரர்
ஊர்க் கல்வெட்டு எண்: 23

அரசன் : அச்சுததேவராயர்

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் திருச்சுற்று மேற்குச்சுவர்.

குறிப்புரை : மகாமண்டலேசுவரன் இலங்கயதேவ சோழ மகாராசயன் குமாரர் காளத்தி ராசையன் அவர்களின் நலனுக்காக இவரின் அதிகாரி திக்கம நாயக்கன் என்பவன் வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு சளுக்கிப்பற்று கலிகடிந்த சோழ நல்லூர் என்கிற வழுகூர் ஊரிலுள்ள திருவயனீசுரமுடைய நாயனார் கோயிலில் நடைபெறும் 'பல்லக்கு சேவை' விழா நடத்துவதற்கு கொடையளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ௨௩ ௨ஹா௨ணூலே–
2. ஶ்ரீ௱௩ மேதிநி [மீ]சற கண்ட கட்டாரி ஸாளு–
3. வ ராசாதிராச ராசபரமேசுவர பாஷைக்கு–
4. த்தப்புவராயர கண்டன் மூவராய[ர] கண்ட–
5. ன் கண்ட நாடு கொண்டு கொண்ட நா–
6. [டு குடா]தான் [வ௵]வூ தெக்ஷிண பச்சிம உத்த–
7. ர சது[ஶூ]முத்திராதிபதி ஸ்ரீவீரவ௲தாப நரசிங்–
8. [க]தேவகுமாறந் அச்சுதையதேவ ௨ஹாரா–
9. யர் பிறி[தி]வி ராச்சியம் பண்ணி அருளா நின்–

10. ற சகா[த்த]ம் ஆசாகூய–நூ மேல் செல்–

11. லா நின்ற எவிளம்பி ஸம்வக்ஸரத்து–

12. க்கு செல்லும் விளம்பி ஸம்வக்ஸரத்து–

13. த்து மேஷ நாயற்று பூறுவ பக்ஷத்து து–

14. வாதெசியும் உத்திரமும் பெற்ற புதவார–

15. த்து நாள் ஜயங்கொண்டசோழ மண்ட

16. லத்து வெண்குன்றக் கோட்டத்து இரு–

17. ம்பேடு நாட்டு சளுக்கிபற்று கலிகடி–

18. ந்தசோழ நல்லூரான வழுகூர் [ஆ]–

19. ளுடைய நாயனார் திருவயநீசுரமுடைய ந–

20. ாயனார் கோயில் பல்லக்குச் சேர்வைக்கு

21. . . . . . உஹாஉணூலேஶ்வர இலங்–

22. கயதேவ சோழ மஹாராசயன் குமாரர் காள–

23. த்தி [றா]சையன் தன்மமாக அதிகாரிய் திக்க–

24. ம [நா]யக்கன் எழுந்தருளப் பண்ணுவிக்கைமி–

25. ல் இந்த ஊ . . . வத்துக்கு . . . . முன்னாள்

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 242/2018

மாவட்டம் : திருவண்ணாமலை

வட்டம் : வந்தவாசி

ஊர் : வழூவூர்

மொழி : தமிழ்

எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்

அரசு : –

அரசன் : –

ஆட்சி ஆண்டு : –

வரலாற்று ஆண்டு : பொ.ஆ. 16 நூற்.

இ.க. ஆண்டறிக்கை: 67/1908

முன் பதிப்பு : –

ஊர்க் கல்வெட்டு எண்: 24

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் திருச்சுற்று தெற்குச்சுவர்.

குறிப்புரை : மீனவராயர் என்பவர் புரிந்த குற்ற செயல் தொடர்பாக வழுகூர் ஊர்சபை செய்த ஒப்பந்தம். தலைமறைவாகி உள்ள குற்றவாளிக்கு இந்த ஒப்பந்தம் வெளியிடப்படும் நாளில் மரண தண்டனை வழங்கப்படுகிறது என்றும், தலைமறைவாகியுள்ள நபர் எங்கு இருக்கிறார் என்ற தெளிவான தகவல் வழங்குபவருக்கு ஊர்ச்சபை 20 பணம் வழங்கும் என்றும், அந்த நபரை பற்றிய தகவலை மறைப்பவர் ஊரை விட்டு தள்ளிவைக்கப்படுபவர் என்றும், அந்த குற்றவாளிக்கு புகலிடம் அளிப்பவருக்கு உரிய அபராதம் விதிக்கப்படுவதோடு தண்டணையும் வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. சறுவாதிகாரி வருஷம் மாசி மாதம் ௩௰ ருᒼ வழுகூர் ஊரவ[ர்] எம்மில் பொரிந்தியிசை ஓலை[யிட்]டு[க்]கொண்டபடி [॥]* மீநவராயர் அவப்படாக்காரி கடைப்பற்ற பெருமாள் கோயிலிலே பூந்து அடைத்துக்கொள்ளுகையில்

2. நாளது சாக கடைவனாகவும் நாளது சாகையில் ஊரிலே இருபது பணம் குடுக்க கடவோம் ஆகவும் மேலைக்கும் யாதொருவர் பறை எடுத்ததுண்டாநால் [இரு]பது பணம் குடுக்க கடைவோம் ஆகவும்

3. பறை எடுத்த அன்று சாகக்கடைவனாகவும் யாதொருத்தர் ஒரு நாள் யிரண்டு நாள் தாமதம் சொன்னதுண்டானா[ல்]* அவன் சாதிக்கும் பிறம்பாய் நங்கை நாசிவனம் விலக்கி நன்மை தின்மையும் துறந்து சாதிக்குப் பி–

4. றம்பாகக் கடைவனாகவும் யிடங்குடுத்தவனே இந்தச்சேதம் உள்ளது குடுத்து யிராசகரத்துக்கும் அபராதமும் குடுத்து ஆவிக்க[ட]*னையும் படக்கடைவனாகவும் இப்படி சம்மதித்து மிசை ஓலையிட்டுக் கொண்டோம் இவ்–

5. வனைவரோ(ம்) மிப்படிக்கு இவை ஊற்கு சமைந்த அபிமான பூஷண வேளார் எழுத்து இப்படிக்கு இவர்கள் சொல்ல எழுதினமைக்கு ஊற்களைக்கு தண்டகநாட்டு வ_மராயர் திருமலையார் மகன் அழகிய வரதன் எழுத்து–

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	: 6
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 856
ஊர்	: வழுவூர்	இ.க. ஆண்டறிக்கை:	68/1908
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XII/62
எழுத்து	: தமிழ்		
அரசு	: பல்லவர்	ஊர்க் கல்வெட்டு எண்:	25
அரசன்	: நிருபதுங்கவர்மன்		
இடம்	: ஏரித் தூம்பு அருகே நடப்பட்டுள்ள கல்.		

குறிப்புரை : தழுந்தூர் நாட்டு மன்னர் மங்கலம் என்ற ஊரைச் சார்ந்த அறமிளப்பாடு என்பவன் வளகூர் ஏரியில் தூம்பு செய்வித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்ரீநிருவதொங்கப் போத்-
2. த[ரை]யர்க்கு யாண்டு ஆ-
3. றாவது வளகூரில் தழு-
4. ந்தூர் நாட்டு மன்னர்[மங்]-
5. கல மறமிளப்பாரு . . . .
6. . செய்வித்த தூம்பு [II]*

மாவட்டம்	:	வடஆற்காடு	ஆட்சி ஆண்டு	:	14
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 746
ஊர்	:	சாத்தமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை:		–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	பல்லவர்	ஊர்க் கல்வெட்டு எண்:		1

அரசன் : நந்திபோத்தரைசர் (இரண்டாம் நந்திவர்மன்)

இடம் : சந்திரநாதசாமி கோயில் அருகே உள்ள ‘பெருமாள் பாறை’.

குறிப்புரை : இவ்வூர் அந்தை இளையாரப்பணந்தி என்பவர் அமணப்பள்ளியைச் சேராத துறவிகளுக்கு உணவு அளிப்பதற்காக ஏழு கழஞ்சு பொன் கொடை அளித்ததைக் குறிக்கிறது. அமணப்பள்ளி முற்றத்தில் நாளொன்றுக்கு ஒரு கழஞ்சு பொன்னுக்கு ஒரு உழக்கு அரிசி என்னும் விகிதத்தில் ஏழு கழஞ்சு பொன்னுக்கும் அரிசி அளக்க ஏற்பாடு செய்யப்பெற்றது. இவ்வறத்தைக் குறைவற நடத்தி வருவதாக ஊர்ச்சபையும் இசைந்தது. இவ்வறத்துக்கு யாரேனும் ஒருவர் கேடிழைத்தால் அவர் காமக்கோட்டத்தை அழித்த ஊழ்வினையைப் பெறுவர் என்றும், இதற்கு தீங்கு சொன்னவர்கள் நாளொன்றுக்கு ஒரு உழக்கு அரிசி வீதம் தண்டனை செலுத்த வேண்டும் என்றும், இக்கொடையை நிறைவேற்றுவதில் தடங்கல் ஏற்படின், அரசனுக்கு ஒரு காடி நெல் தண்டனையாக செலுத்த வேண்டும்.

கல்வெட்டு :

1. ஸ்ரீ நந்திப் போத்தரை–
2. சர்க்குப் பதினான்காவது இ–
3. ப்பள்ளி உடைஆரை நீக்கி இருந்–
4. த தவசிகளுக்குப் பிச்சை ஏழு
5. கழஞ்சு பொன் இவ்வூரந்தை இ–
6. ளையாரப்பணந்தி வைத்த அறம்

7. கழஞ்சினால் உழக்கரிசி முன்குறட்டி

8. வைத்தது இவ்வற மூரோங் காப்-

9. போமாக ஒட்டினோங் காமக்கோ-

10. ட்டமழித்த பாவமாக ஒட்டிற் உ நா-

11. ள் வாயுழக்கரிசிஉம் முட்டிற் கோஇற்கு

12. நாள் வாயொரு காடி நெற்றண்டம்

13. இப் பொன் றட்டார்க் குலம் படாது

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 245/2018

மாவட்டம் : வடஆற்காடு ஆட்சி ஆண்டு : 33

வட்டம் : வந்தவாசி வரலாற்று ஆண்டு : பொ.ஆ. 765

ஊர் : சாத்தமங்கலம் இ.க. ஆண்டறிக்கை: –

மொழி : தமிழ் முன் பதிப்பு : –

எழுத்து : தமிழ்

அரசு : பல்லவர் ஊர்க் கல்வெட்டு எண்: 2

அரசன் : நந்திபோத்தரைசர் (இரண்டாம் நந்திவர்மன்)

இடம் : சந்திரநாதசுவாமி கோயில் அருகே உள்ள 'பெருமாள் பாறை'.

குறிப்புரை : சாத்தமங்கலத்து ஊர் ஏரியினைப் பராமரிப்பதற்காக ஊர்ச் சபையால் அளிக்கப்பட்ட கொடைகளைக் குறிக்கிறது. அறப்புறம் இரண்டு பட்டியும், இள மக்களின் கூட்டு, இறப்பு, காணி எனப்படும் நிலங்களிலிருந்து இரண்டு பட்டியும், சில காணம் நெல்லும், பனிலை அல்லது தரிசு நிலத்திலிருந்து மூன்று மனையும், கீழைச் செறுவு இடுகாட்டைச் சார்ந்த பனை நிலம் முதலியனவும் கொடையாக அளிக்கப்பெற்றன. இக்கொடைகளைப் பராமரிக்கும் பொறுப்பு ஊர்ச்சபையின் நடவடிக்கைகளில் வாக்குரிமைப் பெறாத இளமக்களைச் சேர்ந்ததாகும். இக்கொடையை விற்கவோ அல்லது தனதாக்கிக் கொள்ளவோ முயற்சிப்பவர்கள், அரசருக்கு 100 கழஞ்சு பொன் தண்டனை செலுத்தல் வேண்டுமென்று ஊர்ச்சபையாரும், இளமக்களும் தீர்மானித்தனர்.

கல்வெட்டு :

1. ஸ்ரீ நந்தி போத்தரைசர்கு முப்பத்து மூன்றாவது சாத்தமங்கலத்தூ–
2. ரோம் ஏரிக்குப் பெய்த அறம் ஈத்தங் காட்டு அறப்புற மிரண்டு பட்டியு–
3. மிள மக்கள் பட்டி இரண்டுங் கூட்டும் மிரப்பும் மிளமக்கள் காணமு ம–
4. து நெல்லும் பாநிலை மூன்று மனையும் கீழே செறுவு முதுகாட்–
5. டகப்பட்ட பனைய் நில மித்தனையுமேரிக்கும் பெய்த அறமித்த–
6. னையு மன்றாடுவார் நாயதரல்லா இளமக்கள் நாயகரி தன்றலை விற்–
7. ப்பானுளனாயிலும் கொள்ளலுறுவா னுளனாயிலும் நூறு கழஞ்சு

8. பொன் கோயிற்க்கு துரெ. . . கொள்ள ஒட்டினோ மூரோமும் இளமக்களும்

9. இவ்வறத்து மேலன்றிப் பேசினான் கங்கை யிடைக் குமரி அடைச் செய்தா–

10. ன் செய்த பாவமாக ஒட்டினோம் [கடவ] . . . தும் இத்த . . டமை ஆகும்

மாவட்டம் : வடஆற்காடு
ஆட்சி ஆண்டு : 56

வட்டம் : வந்தவாசி
வரலாற்று ஆண்டு : பொ.ஆ. 788

ஊர் : சாத்தமங்கலம்
இ.க. ஆண்டறிக்கை: –

மொழி : தமிழ்
முன் பதிப்பு : –

எழுத்து : தமிழ்

அரசு : பல்லவர்
ஊர்க் கல்வெட்டு எண்: 3

அரசன் : நந்திபோத்தரைசர் (இரண்டாம் நந்திவர்மன்)

இடம் : சந்திரநாத சுவாமி கோயில் அருகே உள்ள 'பெருமாள் பாறை'.

குறிப்புரை : விழுக்கம் என்ற ஊரைச் சார்ந்த சமண போதகரின் மகள் பூண்ட முப்பாவை என்பவள் காலை நேரத்தில் இப்பள்ளியில் வந்து வழிபடுபவர்களுக்கு உணவளிக்க வேண்டி, 17 கழஞ்சுப் பொன் ஊராரிடம் வழங்கியுள்ளாள். இவரிடம் பெற்ற பொன்னும், பவணந்தி என்பவர் அளித்த பணத்தைக் கொண்டும் இவ்வறத்தினை மேற்கொள்வதாக ஊரார் உறுதியளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்ரீ நந்திப் போத்தரைசர்க்கு
2. யாண்டு ஐம்பத்தாறாவது
3. விழுக்கத்துச் சினடியார் மகளார்
4. பூண்ட முப்பாவைக் காசு பதின் ஏ–
5. ழு கழஞ்சு பொன் இப்பள்ளிக்கு
6. கழஞ்சினா லுழக்கரிசி வைகல்
7. . . . கறூட்டுவா ரிவ்வறம் பவண–
8. [ந்தி]யு வைத்த பணம் ஊரோங் கா–
9. ப்போமானோம்

மாவட்டம் : வடஆற்காடு
ஆட்சி ஆண்டு : 6

வட்டம் : வந்தவாசி
வரலாற்று ஆண்டு : பொ.ஆ. 875

ஊர் : சாத்தமங்கலம்
இ.க. ஆண்டறிக்கை: –

மொழி : தமிழ்
முன் பதிப்பு : –

எழுத்து : தமிழ்

அரசு : பல்லவர்
ஊர்க் கல்வெட்டு எண்: 4

அரசன் : கம்பவர்மன்

இடம் : சந்திரநாதசுவாமி கோயில் அருகே உள்ள 'பெருமாள் பாறை'.

குறிப்புரை : காடகதியரையர் என்பவரின் மனைவி மாதவி என்பவள் ஜைனக் கோயிலை புதுப்பித்தும், முகமண்டபத்தினை புதிதாக எடுப்பித்தும், சமண முனிகள் தங்கும் பாளியை புதுப்பித்தும், யக்ஷி பிடாரிக்கு என்று தனிக்கோயிலை எடுப்பித்துள்ளாள். மேலும் இப்பள்ளிக்கு பெரிய மணி ஒன்றினையும் செய்தளித்துள்ளாள்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கம்ப பன்மற்கு யாண்–
2. டாறாவது காடகதியரையர் ம–
3. ணவாட்டி மாதவி யித்திருக்கோ–
4. யில் புதுக்கி முகமண்டக மெ–
5. டுப்பித்து பாழி புதுக்கி யக்–
6. கா படாரி திருக்கோயில் லெடு–
7. ப்பித்து இப்பள்ளிக் கிட்ட
8. பெரு மணி ஒன்று ஊட்டு(வி)த்தாள்

மாவட்டம்	: வடஆற்காடு	ஆட்சி ஆண்டு	:	11
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 971
ஊர்	: சாத்தமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை:		–
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்:		5
அரசன்	: பார்த்திவேந்திரவர்மன்			

இடம் : சந்திரநாத சுவாமி கோயில் அருகே உள்ள 'பெருமாள் பாறை'.

குறிப்புரை : வெண்குன்றக் கோட்டம் வெண்குன்ற நாட்டு, வந்துரை ஊரார், சில நிலங்களை சாத்தமங்கலத்து ஊர்ச்சபையாரிடம் தானமாக வழங்கியுள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பார்த்திவேநு
2. பந்மற்க்கு யாண்டு யக–ஆவது வெண்குன்ற கோட்டத்து வெ–
3. ண்குந்ற நாட்டு வந்துறை . . . . . இன் நாட்டு சாத்தமங்க–
4. லத்து ஊரோர்க்கு சிலாலே[கை]க செது கு[டுத்தான்] சையகோந்ணாந இரு–
5. முடிசோழ முகவன் ஸ்ரீஉடையார் . .
6. ல் எங்கள்ளு ரேரி(யி)ல் கண் . .
7. ரேரியில் மேக்கு னோக்கி திரி . .

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 249/2018

மாவட்டம்	: வடஆற்காடு	ஆட்சி ஆண்டு	: 12
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 997
ஊர்	: சாத்தமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை:	–
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்:	6
அரசன்	: முதலாம் இராசராசன்		
இடம்	: சந்திரநாத சுமாமி கோமில் அருகே உள்ள 'பெருமாள் பாறை'.		

குறிப்புரை : நந்திதேவரின் மணாக்கரும், பள்ளிஉரிமை உடையவருமான பலதேவப்பிடாரன் என்பவர் சாத்தமங்கலத்திலுள்ள விமலஸ்ரீ என்றழைக்கப்படும் தீர்த்தப்பள்ளி ஆழ்வார் கோமிலுக்கு நந்தாவிளக்கெரிப்பதற்காக இறைமிலியாக நிலம் ஒன்றினை அளித்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது. கொடையாக அளிக்கப்பட்ட 'இலாடையார் செறு' என்னும் இந்நிலம் இரண்டும் பெருந்தூம்பினால் நீர்ப்பாசனம் செய்யப்பெற்றது. வரிவிலக்கு அளிக்கப்பட்ட இந்நிலத்தில் பமிர் செய்யும் குடிகளிடத்தும், பள்ளிமிடத்தும் கோமில் வாமில் வழிப் போந்த குடிமையும், நீர்விலையும் பெறக்கூடாது என விலக்கு அளிக்கப்பெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜராஜகேஸரி வந்ற்கி யாண்டு ௰௨ ஆவது வெண்குன்றக் கோட்டத்து வெண்குன்ற நாட்டுச் சாத்தமங்கலத் தூரோம் எங்களூர்ப் பள்ளி விமலஸ்ரீ–
2. யாகிய தீர்த்தபள்ளி ஆழ்வார்க்கு ஸ்ரீ நந்திஷேவர் மாணாக்கர் இப்பள்ளியுடைய பலதேவ பிடாரன் வைத்த திருநந்தா விளக்குக்கு எங்களூர்ப் பூமி பெருந்தூம்பு பாயும் நிலம் இலாடையார் செறுவிரண்–
3. டிற்கும் தெந்ப்பாற் கெல்லை கணிக்குண்டிலுக்கும் கிடங்கள் செறுவிற் கொழுக்குத்திக்கு வடக்கும் மேல்பாற் கெல்லை திருவடிகள் ஹோகத்திற்குக் கிழக்கும் வடபாற்கெல்–

4. லை கரம்பைக்கு மயிலாடு பாறைக்குத் தெற்குங் கீழ்பாற் கெல்லை கரம்பைக்கும் பலிப்பட்டியின் கொழுக்குத்திக்கு மேற்கு மிந் நாற் பேரேல்லையுள்ளகபட் டுண்ணில மொழிவின்றி விலையறக் குடுத் திறை–

5. யிழிச்சிக் கோயில் வாயிலாறு போந்த குடிமையும், நீர் விலையும் இன்னில முழுதகுடியையும் பள்ளியையும் காட்டப் பெறாதிமாகவும் இன்னிலத்துக்கு தலைநீர், கடைநீர் பாயப் பெறுவதாகவும் இதற்கு அஹிதம் நினை–

6. ப்பார் பஞ்சமஹா பாதகஞ் செய்தாராவார்

மாவட்டம்	: வடஆற்காடு	ஆட்சி ஆண்டு	: 5
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 965
ஊர்	: சாத்தமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை:	–
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்:	7
அரசன்	: பார்த்திவேந்திரவர்மன்		

இடம் : சந்திரநாத சுவாமி கோயில் கருவறை அருகே உள்ள சிறிய பாறை.

குறிப்புரை : "எங்களூர் விஷ்ணு கிருஹத்து" என்றழைக்கப்படும் விஷ்ணு கோயிலுக்கு திருவமுது படைப்பதற்காக நிலம் ஒன்றினை சாத்தமங்கலத்து ஊரார் வழங்கியுள்ளனர். நிலத்தின் எல்லைகளைக் குறிக்கும் கல்வெட்டு பகுதியின் மேல் கட்டடம் எழுப்பப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பார்–
2. த்திவேன்திரபன்மற்கு
3. யாண்டு ரு ஆவது வெண்குன்ற . . . . .
4. . ன்றநாட்டு சாத்தமங்கலத்தூரோம் எங்களூர் விஷ்ணுக்ருஹ . .
5. . . . . றையும் பனங்காட்டுக் குண்டிலும் இவ்விரண்டும்
6. . . . . மொரு திருவமிர்து காட்ட வைத்தோம் ஊரோம்
7. . . . . காவ . . தகவும் இதனுக்கு அஹி
8. . . . . ய்த பாவ . . . .

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	11–ஆம் நூற்.
ஊர்	:	கொவளை	இ.க. ஆண்டறிக்கை:		–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்:		1
அரசன்	:	–			

இடம் : கரியமாணிக்க பெருமாள் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : இவ்வூரைச் சார்ந்த வரும் காவல்/ அரண்மனை பெண்டுகளில் ஒருவருமான பெருமாள் நாச்சியார் மகள் வீரப்பெருமாளுக்கு தன்மமாக (புண்ணியமாக) இந்த கோயில் சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. இதனை அமைத்தவர் முலை எழுந்தாள் என்பவராவார். எனவே, இதனைக் கருத்தில் கொண்டு (நோக்கி) முறையாக (பரிசாக) இத்திருமுற்றத்தின் பெயர் வீரயெழுந்தான் என்பதாகும்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இத்திருமுற்றம் இவ்வூர் பரிக்கிரகப் பெண்டுகளில்
2. பெருமாள் னாச்சியார் மகள் வீரப்பெருமாள் தன்மம் இத்தன்
3. மம் முலையெழுந்தாள் செய்வித்த இத்திருமுற்றம் பேர் வீரயெழு–
4. தான் னோக்கிப் பரிசாக வேனும்

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: கொவளை	இ.க. ஆண்டறிக்கை	: -
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன்	: விக்கிரமசோழன்		

இடம் : கரியமாணிக்க பெருமாள் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : விக்கிரமசோழன் மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதி மட்டும் உள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமாது புணர புவிமாது வளர நாமாது விளங்க செயமாது . . . . .
2. தன்னிரு பதமலர் மன்னவர் மண்ணிய உரிமையிற் மணிமுடி சூடி வெங் . . .
3. மெய்யறந் தழைப்பக் கலிங்கம் கரியக் கடல் மலை நடாத்தி வலங்கொளாழி . . .
4. இரு சுடரளவும் ஒரு கொடை நிழற்ற வீரஸிம்ஹாஸனத்து திரிபுவன . . .
5. யாளோடும் வீற்றிருந்தருளிய கோபரகேசரி பன்மரானச் சக்கரவத்திகள் ஸ்ரீ

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	: 12
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1030
ஊர்	: கொவளை	இ.க. ஆண்டறிக்கை:	–
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்:	3
அரசன்	: இராசாதிராசன்		

இடம் : கரியமாணிக்க பெருமாள் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : குவளை ஊரிலுள்ள திருவேக தநிச்சிரமுடையார் கோயிலில் ஒரு விளக்கெரிக்க அரைப்பொன் கழஞ்சுப் பொன்னினை அச்சாதரப் பலவரையர் தானமாக வழங்கியுள்ளார்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. ஸ்ரீராஜாயிரா–
3. ஜ தேவற்கு யா–
4. ண்டு ௰உ ஆ –
5. வது குவளை
6. த்திருவேக த–
7. நிச்சிரமுடை–
8. டயார்க்குத்–
9. தாணி அச்–
10. சாதரப் ப–
11. லவரையூரு

12. டையாந் நவை

13. வச்ச சந்

14. திவிளக்கொ

15. ந்று முப்ப

16. ணிகு அரை

17. கழஞ்சு ெ–

18. பாந் கொ–

19. ண்டு எரிக்க

20. கடவோமாமே–

21. நாமி கோ–

22. யில் சிவப்பிரா–

23. மணரோ–

24. ம்

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	சகம் 1439
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1517
ஊர்	: கொவளை	இ.க. ஆண்டறிக்கை:		–
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	: விசயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்:		4
அரசன்	: கிருஷ்ணதேவராயர்			
இடம்	: கரியமாணிக்க பெருமாள் கோயில் கருவறை தெற்குச் சுவர்.			

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு சளுக்கிப்பற்றில் குவளை என்னும் வானவநல்லூர் ஊரில் உள்ள சாத்து எம்பெருமான் கோயிலுக்கு நிலம் ஒன்று சர்வமானியமாக வழங்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. உ *ஸ்ரீ ராஉஜயடீ ஸ்வஸ்திஸ்ரீ உநு உஹாஉணூலெஸ்வரநு* அரியராய விஹாடநு ராய பரவபரஉேஸ்வர–
2. நு ஸ்ரீவீரவபரதாவநு ஸ்ரீவீரகிஷ்ணஷேவ உஹாரராயர் பிறுதுவிராச்சியம் பண்ணி யருளா நின்ற சகாற்த்தம்
3. ஆசாஉடுயகூ ன் மேல் செல்லா நின்ற யீசுவர ஸங்வத்ஸரத்து மகர நாயற்று பூறுவ பக்ஷத்து தெசமியு[ம்] திருவோ–
4. ணமும் பெற்ற சோமவாரத்து செயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு சளுக்கிப் பற்று குவ–
5. ளையாகிய வானவ நல்லூர் பெருமாள் தாருல சோமண்ண சாத்து எம்பெருமான் திருவிடையாட்டம் பூர்வசைக்கு சோம நடந்து
6. வருகையில் அய்யன் கோ . . . தள அய்யன் தம்பியார் . . . அய்யன் தன்மம் ஆக சங்கிறம புண்ணிய காலத்து பெருமானுக்கு சறுவமானியமாக சந்திராதித்தவரையும் நடத்தக்கடைவதாகவும் இந்த தன்–

7. . . . வைன் கெங்கைகரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போக கடைவராகவும் உ

8. கணபதி உ

மாவட்டம் : திருவண்ணாமலை
ஆட்சி ஆண்டு : –
வட்டம் : வந்தவாசி
வரலாற்று ஆண்டு : 17–18–ஆம் நூற்.
ஊர் : கொவளை
இ.க. ஆண்டறிக்கை: –
மொழி : தமிழ்
முன் பதிப்பு : –
எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்
அரசு : விசயநகரர்
ஊர்க் கல்வெட்டு எண்: 5
அரசன் : கிருஷ்ணதேவராயர்
இடம் : சிவன் கோயில்.

குறிப்புரை : குவளை ஊரிலுள்ள ஸ்ரீகைலாயமுடைய நாயனார் கோயிலுக்குத் தானமளித்துள்ள செய்தி.

கல்வெட்டு :

1. உ
2. வினாயகர் நஉ
3. ஸது ஸ்வஸ்தி ஸ்ரீ௨ந
4. உஹா௨ணூலெஸ்வரன்
5. ராசாதிராச பரமேஸ்வர
6. ன் ஸ்ரீசதாசிவ தேவ
7. மகாராயர் பிறுதிவி
8. ராச்சியம் பண்ணி அ–
9. ருளா நின்ற சகாற்த–
10. ம் சூஅயகன் மேல்
11. செல்லா நின்ற . . .
12. சித் தாந்திர வருஷம்
13. தை மாதம் ஸ்ரீ௨ந

14. ஹொய்ஸணதெஶ்வ

15. ரவந் தபாலத்த

16. . . . .

17.

18. ன் காரியத்துக்–

19. கு கற்த்தரான அ–

20. னந்த . . .

21. குவளை நயினார்

22. ஸ்ரீகயிலாய–

23. முடைய நயினார்

24. க்கு போகக்கடை

25. வராக சந்–

26. திறாதித்தவ–

27. ரையும் நட–

28. க்க கடவதாக–

29. வும் . . . யிந்த

30. தன்மத்து

31. க்கு இயா–

32. தொருவர்

33. அகிதம் ப–

34. ண்ணி ன

35. வர்கள் உ–

36. ண்டா–

37. னால்

38. கெங்கை–

39. கக்கை–

40. ரயிலே

41. காராம்

42. பசுவை–

43. வ கெ–

44. தோ–

45. ஷத்

46. திலே

மாவட்டம் : திருவண்ணாமலை
ஆட்சி ஆண்டு : 3

வட்டம் : வந்தவாசி
வரலாற்று ஆண்டு : பொ.ஆ. 1340

ஊர் : ஓசூர்
இ.க. ஆண்டறிக்கை: 34/1933

மொழி : தமிழ்
முன் பதிப்பு : –

எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்

அரசு : சம்புவராயர்
ஊர்க் கல்வெட்டு எண்: 1

அரசன் : முதலாம் இராசநாராயணன்

இடம் : அகதிகள் முகாம் அருகில் உள்ள சறுக்காம்பாறை.

குறிப்புரை : ஓசூர் என்கிற காலிங்கராய நல்லூர், சிறுகுளத்தூர், இவைச்சில் ஆகிய ஊர் நிர்வாகிகளான வாரியன் மற்றும் கரணத்தானுக்கும் சம்புவராய மன்னன் இராசநாராயணன் மேற்படி ஊர்கள் அகர இறையிலியாக அளித்துள்ள ஆணை. மேற்படி ஊர்களில் உள்ள நன்சை, புஞ்சை, தோட்ட நிலங்கள், திருத்திக்கொள்ளவுள்ள நிலங்கள், புறக்கலனை உட்பட இவற்றிலிருந்து வசூலிக்கப்படும் கடமை, பொன்வரி உள்ளிட்ட பல வரிகளும் மற்றும் பலசில்வரிகளும் ஆகிய அனைத்து வரிகளின் வருவாய்களை 88 பங்குகளாக பிரித்து தேவதானத்துக்கு (சிவன் கோயிலுக்கு அளிக்கும் தானம்) ஒரு பங்கும், திருவிடையாட்டத்துக்கு (பெருமாள் கோயிலுக்கு அளிக்கும் தானம்) ஒரு பங்கும், இவ்வூரில் குடியேற்றப்பட்டுள்ள 86 பட்டர்கள் குடும்பத்திற்கு 86 பங்குகள் என பகிர்ந்தளித்து இம்மூன்று ஊர்களும் அகர இறையிலியாக தானமளிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸகலலோக சக்ரவத்தி ஸ்ரீ–
2. ராசநாராயணன் ஓசூரான காலிங்கராய நல்லூர்
3. சிறுகுளத்தூர் இவைச்சில் வாரியனுக்கும் கரண–
4. த்தானுக்கும் தங்கள் ஊர்கள் மூன்றாவது ஆடி
5. மாதம் முதல் கடமெ பொன்வரி உள்ப்பட்ட

6. பலவரிகளும் பல சில்வரிகளும் இனிப்பிறக்கும்

7. வரிகளும் பலஉபாதிகளும் உட்பட ப[ை]ழய தேவதாநம்

8. திருவிடையாட்டம் உட்பட அடைெத்த தேவதாநம்

9. பங்கு ஒன்றும் திருவிடைெயாட்டம் பங்கு ஒன்றும்

10. நாநாமொ.சுரகளான பட்ட[ர்]கள் பேர் எண்ப–

11. த்து ஆறுக்கும் பங்கு எண்பத்து ஆறும் ஆக

12. தேவபாகம் உட்பட பங்கு எண்பத்து

13. எட்டும் நஞ்செய் புஞ்செய் தோட்டப்பற்று புற

14. க்கலனை வாசல்வரி உட்பட நாற்பாற்கெல்லை–

15. யும் திருத்திக் கொள்ளும் நிலமும் உட்பட உதக பூறுவ

16. தன்மதான ஸர்வமாநிய அகரஇறையிலி ஆக சந்திராதித்தவரையும் செல்ல

17. கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளச் சொல்லிவிட்டோம் இப்படி செய்க

18. இவை சேய்திராயர் எழுத்து ங வது சித்திரை மீ யரு க்கு எதிரடை
இட்டது

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 257/2018

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	: 3
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1340
ஊர்	: ஓசூர்	இ.க. ஆண்டறிக்கை	: 34/1933
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சம்புவராயர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன்	: முதலாம் இராசநாராயணன்		
இடம்	: அகதிகள் முகாம் அருகில் உள்ள சறுக்காம்பாறை.		

குறிப்புரை : சம்புவராய மன்னன் முந்தைய கல்வெட்டில் தெரிவிக்கப்பட்ட ஆணையினை தொண்டை மாநாயக்கன் என்னும் அதிகாரி வாரியனுக்கும் கரணத்தானுக்கும் தெரிவிக்கும் ஓலை இது. சென்ற கல்வெட்டில் சிறு குளத்தூர் தனி ஊராக இருந்தது அவ்வூரினை ஓசூர் என்கிற காலிங்கராய நல்லூர் ஊரில் இணைத்து 86 பட்டர்களுக்கு அகர இறைமிலியாக வழங்கப்பட்டுள்ளது. முன்னர் கோயிலுக்குரிய தேவதான ஊராக விளங்கிய 'காலிங்கராய நல்லூர்' 'காலிங்கராய சதுர்வேதி மங்கலம்' ஆகவும் மாற்றப்பட்டு பிராமணர்களுக்குரிய ஊராக மாற்றம் பெற்றுள்ளது. இவ்வூரின் அனைத்து வரிகளும் தேவதானத்துக்கு ஒரு பங்கும், திருவிடையாட்டத்துக்கு ஒரு பங்கும், 86 பட்டர்களுக்கு 86 பங்கும் வழங்கிட தெரிவிக்கும் ஓலை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ தொண்டை மாநாயக்கன் ஓலை உரத்திப் பற்றில் சிறுகுளத்தூர் கூடின ஓசூரான காலிங்கராய
2. நல்லூரான காலிங்கராய சதுர்வேதிமங்கலத்து வாரியனும் கரணத்தானும் கண்டு தங்கள் ஊர் மூன்றாவது
3. ஆடிமாதம் முதல் கடமை ஆயம் கோமுற்றப் பேறு உள்ளிட்ட பல நெல்லாயங்களும் பொன்வரி காத்திகைக்கு இடும் பணம்

4. வாசல் வினிவோகம் உள்பட பலவரிகளும் இனிப்பிறக்கும் வரிகளும் மற்றும் பல உபாதிகளும் உட்பட ப[ழை]ழய தேவதானம் திருவிடையாட்டம் உபாதிக்கு

5. அடைத்த தேவதானம் பங்கு ஒன்றுந் திருவிடையாட்டம் பங்கு ஒன்றும் நாநாகோத்ரங்களான பட்ட[ர்]களுக்கு பங்கு எண்பத்து ஆறும் ஆகப் பங்கு

6. எண்பத்தெட்டுக்கும் நத்தங்கள் நஞ்செய் புஞ்செய் நாற்பாற்கெல்லையும் உட்பட உதக பூறுவ மாக தாந ஸர்வமாந்ய அகர

7. இறையிலி ஆக சந்த்ராதித்தவரையும் செல்லக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளவும் சொன்னோம் இப்படி செய்க

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	: 36
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 943
ஊர்	: ஆலத்தூர்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசன்	: முதலாம் பராந்தகன்		
இடம்	: சிவன் கோயில் கருவறை தெற்கு குமுதம்.		

குறிப்புரை : வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டுப் பிரிவில் உள்ள ஆலத்தூர் ஊரினை காணி விருத்தியாக பெற்றிருந்த வீரபாண்டியன் என்பவன் இவ்வூரில் ஸ்ரீசோமீஸ்வரம் என்ற கோயிலையும், குளம் ஒன்றினையும் எடுப்பித்துள்ளான். இவ்வூர் சபையினர் மேற்படி கோயிலுக்கு நிலம் ஒன்றினை விற்பனை செய்து கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு முப்பத்தாறாவது வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு ஆலத்தூர் ஊரோம் எம்மூர்க் காணி விருத்தி பெற்ற வீரபாண்டியன் எம்மூர் ஸ்ரீசோமீஸ்வரம் எடுப்பிச்ச ஸ்ரீகோயிலும் வாவியும்

2. . . . . விற்றுக் குடுத்தோம் ஊரோம் இதற்கெல்லை கீழ்பாற்கெல்லை வாவியின் கீழ்கரையின் மேல்வரம்பும் தெற்கெல்லை முள்ளிப்பாக்கிழான் மனையின் வடக்கு மேற் மனையின் . . . கல்நாட்டித் தேயபோன வழியின் கிழக்கும் வடபாற்கெல்லை

3. பெரிய வா[ய்]க்காலின் தெற்கும் இந்நான்கெல்லை உன் உண்ணிலம் ஒழிவின்றியும் இதற்கு போகம் ஏகலையன் கல்லுவித்த செ. . . . கிழ[க்]கெல்லை இச்சாத்தகன் மாதவநம்பியும் . . . த்தானும் உள்ளிட்ட எப்பேற்பட்டோமும் . . . .

4. வ்வேரி கீழ்நிலத்தில் கிணறுட்பட இருபத்துநாற் சாண் கோலாற் தென் வடகை நாற்பத்திரு கோலும் கிழக்கு மேற்கு முப்பதினென் கோலும் . . . . .கீழ்பாற்கெல்லை கரைக்கு மேற்கும் தென்பாற்கெல்லை . . . வடக்கு மேல்பாற்கெல்லை சூலக்கல்லுக்குக் கிழக்கும் . . .

5. கெல்லை ஏரிகரையின் தெற்கும் இதற்கு உள்பட்ட நில உண்ணிலம் ஒழிவின்றி ஏரிக்கு வரும் நீராடு வாய்க்காலும் விலைக்காணம் பெற்றுக் கொண்டு விற்றுக் குடுத்தோம் கண்ணஞ்சாத்தகன் இவ்வனைவோம் ஆலத்தூர் ஊரோம்.

6. . . . . . . தோமானோம் ஊரார். . . . காணம் தண்டப்பட்டு இப்படி ஒட்டிக் குடுத்தோம் ஆலத்தூர் ஊரோம் இதற்கு விக்கஞ் செய்தாரை கங்கை இடை குமரி இடை செய்த பாவம்

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 259/2018

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	: 36
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 943
ஊர்	: ஆலத்தூர்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன்	: முதலாம் பராந்தகன்		
இடம்	: சிவன் கோயில் மேற்கு குமுதம்.		

குறிப்புரை : இக்கோயிலை கட்டுவித்த பெருந்தச்சன், தச்சர் ஆகியோருக்கு புதுக்குப்புறமாக நிலம் அளிக்கப்பட்டுள்ளது. அவரவர்க்கு பங்குகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. விளைநிலத்தில் நாலில் ஒரு விளைச்சலினை அளிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு முப்பத்தாறாவது இரும்பேடு கீழ் . . . நாற்ப்பெரெல்லையுள் நாலு . . .
2. ஒரு கூறாய் ஆடியனமார் . . . கொட கூறாய் தச்சர்க்குப் புதுக்குப்புறம் ஸ்ரீவேலி விஷ்ணு ஹப்பெருந்தச்சினு தேவனும் பல தேவனும் ஒரு கூறாய் பெருந்தச்சனுக்கு நன்செய் காற் கூறு
3. ம்மூர் தேவனுக்கு ஒரு கூறும் பலதேவனுக்கு ஒரு கூறும் ஆக நாற்பெரெல்லையிலுமுள்பட விளை நிலத்துள் நாலிலொன்றும் இத்தச்சனு . . .

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	18–ஆம் நூற்.
ஊர்	:	ஆலத்தூர்	இ.க. ஆண்டறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	:	–			
இடம்	:	சிவன் கோயில் தெருவில் உள்ள தனிகல்.			

குறிப்புரை : இவ்வூரிலிருந்த மடம் ஒன்றிற்கு நிலம் தானம் 'வழங்கப்பட்ட செய்தி.

கல்வெட்டு :

1. விபவ ஹ
2. . . . வனுக்கு விட்ட . . .த்துக்கு ஏல வ
3. . . . .தெருவுக்கு மேற்கு கன்னி மனைக்கு
4. . . . தந்திபன்மர் படப்பைக்கு கிழக்கு நாய
5. நாற் சன்னதிக்கு தெற்கு நான் கெல்லைக்கு விட்ட
6. மனையும் படப்பும் சந்திராதித்தவரையும்
7. இந்த மடத்துக்கு அகிதம் செய்தவரை கெங்
8. கை கரையிட் பசுவைக் கொன்றப்
9. பாபத்தைக் கொண்டவன் உ

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 261/2018

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1370
ஊர்	:	வெடால்	இ.க. ஆண்டறிக்கை	:	78/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	விசயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	கம்பணஉடையார்			
இடம்	:	நீலகண்டீஸ்வரர் கோயில் மகாமண்டப வடக்கு முப்பட்டைக்குமுதம்.			

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து சிங்கபுர நாட்டு, பொன்னூர் பற்றில் இடம்பெற்றிருந்த விடார் ஊரிலுள்ள கறைகண்டீச்சுரம் உடையார் கோயிலுக்கு உமையா நத்தம் திருநாமத்துக்காணியாக இறைநீக்கித்தரப்பட்டு, அதன் வரிவருவாய்கள் கோயில் பூசை, திருப்பணி, நந்தாவிளக்கிற்குப் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. பொக்கண உடையார் குமாரர் குமார கம்பண உடையாக்குச் செல்லா நின்ற ஸாதாரண வருஷம் மீந நாயற்று பூர்வ பக்ஷத்து ஷஷ்டியும் புதந் கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து சிங்கபுர நாட்டுப் பொன்னூற் [பற்]று விடாரில் உடையார் கறைகண்டீஸ்வரமுடைய நாயனார்க்கு உடையார்

2. உடையாற்க்கு நன்றாக இந்நாயநாற்கு பூசைக்கும் திருப்பணிக்கும் திருனந்தா விளக்கு[க்கு]ம் இப்பற்றில் உமையால் ஏந்தல் திருநாமத்துக்காணி யிறைமிலியாகத் தந்தோம் இவ்வூர் நாற்பாற்கெல்லைக்கும் உட்பட்ட நன்செய் புன்செய் மாவடை, மரவடை, குளவடை, புறவடை ஏரிவாய் புறவடை நத்தம் தரிசு களர் திடர் உட்பட நாற்பாற்கெல்யும் தறிக்கடமை

3. காசாயவற்கம் குடிமை பொன்வரி சூலவரி அரிசி காணம் காத்திகைபச்சை புது நெல்லு நல்லெருது நற்கிடா விற்பணம் வாசல்ப்பணம் ஆசீவக கடமை ஏரிமீந்பணம் வெட்டி வரியும் பலவரிகளும் பலஉபாதிகளும் பல காணிக்கையும் திருவாசல்லை நோக்கி இனிப்பிறக்கும் வரியும் உட்பட ஸர்வமாந்ய இறையிலி ஆக நாற்பாற்கெல்லையும் திருநாமத்துக்காணி இறையிலி

4. இப்படிக்கு சந்த்ராதித்தவரையும் செல்ல கல்லிலும் செம்பிலும் வெட்டி இவ்வூர் நான்கெல்லையும் திருச்சூலஸ்தாபணம் பண்ணித் தந்தோம்

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	25
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1302
ஊர்	:	வெடால்	இ.க. ஆண்டறிக்கை:		77/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சம்புவராயர்	ஊர்க் கல்வெட்டு எண்:		2
அரசன்	:	குலசேக சம்புவராயர்			
இடம்	:	நீலகண்டீஸ்வரர் கோயில் மகாமண்டப மேற்கு மற்றும் வடக்கு குமுதம்.			

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து விடார் பற்று எனும் விக்கிரமபாண்டிய வளநாட்டு விடார் ஊரிலுள்ள கறைகண்டீஸ்வரமுடையார் கோயிலில் 'செய்யாற்று வென்றான்' என்ற பெயரில் திருவிழா நடக்கவும், கோயில் திருப்பணி மற்றும் நந்தாவிளக்குக்காகவும் அத்தி பற்றைச் சார்ந்த அருளி ஏந்தல் என்ற ஊரினை வரிநீக்கி திருநாமத்துக்காணியாகக் கொடுக்கப்பட்டுள்ள செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ குலசேகரச் சம்புவராயற்கு யாண்டு உ௰ரு ஆவது ரிஷ நாயிற்று பூர்வபக்ஷத்து த்ரிதியையும் திங்கட்கிழமையும் பெற்ற மூலத்து நாள்
2. ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து விடார் பற்றான விக்ரமபாண்டிய வளநாட்டு விடாரில் உடையார் கறை கண்டீஸ்வரமுடைய நாய–
3. னாற்கு செய்யாற்று வென்றான் திருநாளுக்கும் திருப்பணிக்கும் திருநந்தாவிளக்குக்கும் அத்திப்பற்று அருளி ஏ[ந்](த்)தல் சந்த்ராதித்தவரையும் நடக்கும் படிக்கு
4. ஸர்வமான்ய இறையிலி திருநாமத்துக்காணி ஆக இன்னாயநாற்கு இவ்வூர் நாற்பாற்கெல்லையும் திருச்சூலஸ்தாபனம் பண்ணிக் கல்லிலும் செம்–
5. பில்லிலும் வெட்டிக்குடுத்தோம்

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	13+2
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	13–ஆம் நூற்.
ஊர்	: வெடால்	இ.க. ஆண்டறிக்கை:		74/1908
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	: பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்:		3
அரசன்	: –			
இடம்	: நீலகண்டீஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடபுறக்குமுதம்.			

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து விடால் எனும் விக்கிரமபாண்டிய வளநாட்டு அகலூர் பற்றில் இடம் பெற்றுள்ள விடால் என்னும் ஊரிலுள்ள விடால் கறைகண்டீஸ்வரமுடைய நாயனார் கோயிலில் பாண்டிய மன்னன் பெயரில் ஏற்படுத்தப்பட்ட 'கோதண்டராமன் திருவிழா'ச் செலவுகளுக்காகவும், அமுதுபடி, சாத்துப்படி மற்றும் திருப்பணிகளுக்காகவும் விடாலிருந்து கிடைக்கும் வரி வருவாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்தி கோனேரிமேல் கொண்டான் ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து விடால் பற்றான விக்கிரம பாண்டிய வளநாட்டு அகலூர்ப் பற்றில் விடாலில் நாயனார் கறைக்கண்டீசுரமுடைய நாயனார் கோயிற்தானத்–
2. தாற்கு இன்னாயனாற்கு நல்லப்பன் படியன் அங்கராயன் நம்பேரால் கட்டின கோதண்டராமன் சந்திக்கும் திருநாளுக்கும் அமுது சாத்துப்படி உள்ளிட்டு வேண்டும் நித்த நிமந்தங்களுக்கும் திருநாள் செலவுக்கும் இக்கோயில் திருப்பணிக்கும் உடலாக இ[வ்]வூர் கெல்லைக்கும் உட்ப்பட்ட நன்செய் புன்செய் நத்தம் தரிசு
3. ஏரி ஏரிவாய் புறவடை திடர்களர் நீர்நிலை மரநிலை உள்ளிட்ட ஸஸ்த ப்ராப்திகளும் பதின்மூன்றாவதின் எதிர் இரண்டாவது சித்திரை மாதம்

முதல் தேவதான இறையிலியாகத் தந்து இத்தால் வரும் கடமை பொன்வரி காணிக்கை கார்த்திகைப் பச்சை மாவடை குளவடை காசாய வற்கம் கீற்றுவரி சந்துவிக்கிரமப்பேறு வாசல் வினிவோகம் கூற்றி–

4. லக்கை கடைக்கூட்டிலக்கை தறிஇறை செக்கு இறை தட்டுப்பட்டி தட்டார் பாட்டம் அரிசிக்காணம் ஆயவற்கம் மகண்மை வெட்டிப்பேறு தச்சுத்தாழ்வு ஆளமஞ்சி நாட்டு வினியோகம் உள்ளிட்ட அனைத்தாய வற்கத்து இறைகளும் உபாதிகளும் தேவைகளும் உட்பட முதல் அடங்கல் இறையிலியாக வரியிலார் கணக்கிலும் கழித்து இதுக்கு நிச்–

5. செயிப்பான் பொன்னும் இன்னாட்டுக்கு நிச்செயித்த முதலிலே செலவிடுவதாகச் சொன்னோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு இவ்வூர் கைக்கொண்டு சந்த்ராதித்தவரையும் செல்லக் கல்லிலும் செம்பிலும் வெட்டுவித்து இவூர் நான்–

6. கெல்லையிலும் திருச்சூலஸ்தாவனம் பண்ணிக்கொண்டு முதலடங்க இறையிலியாக அனுபவித்துப் பூசை[யு]ந்–

7. திருநாளும் திருப்பணியும் தாழ்வற நடத்திப்போதுக இவை நெட்டூருடையான் எழுத்து இவை நெட்டூருடையான் தேவ்வச்சிவப்பெருமாள் இளையாழ்வான் காலிங்கராயன் எழுத்து யாண்டு நாள் உாகூய தூஞூழ பபாஹஃவஹ்ந

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 264/2018**

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	16 (13+3)
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	13–ஆம் நூற்.
ஊர்	:	வெடால்	இ.க. ஆண்டறிக்கை:		72/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்:		4
அரசன்	:	சடையவர்மன் சுந்தரபாண்டியன்			
இடம்	:	நீலகண்டீஸ்வரர் கோயில் கருவறை மேற்புற முப்பட்டைக் குமுதம்.			

குறிப்புரை : முழுமை பெறாத கல்வெட்டு. பாண்டிய மன்னன் ஸ்ரீசுந்தரபாண்டியனின் பெயரும் ஆட்சியாண்டு மட்டும் இடம்பெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோனேரிமேல் கொண்டான் கோற்சடபன்மர் திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு பதின்மூன்றாவதுக்கு எதிர் மூன்றாவது கற்கடக நாயற்று பூர்வபக்ஷத்து ப்ரதமையு

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 265/2018**

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	27
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1205
ஊர்	:	வெடால்	இ.க. ஆண்டறிக்கை:		73/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்:		5
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்கன்			
இடம்	:	நீலகண்டீஸ்வரர் கோயில் கருவறை மேற்கு குமுதம்.			

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து விடார் பற்று எனும் விக்கிரமபாண்டிய வளநாட்டு விடார் ஊரில் உள்ள கறைகண்டீஸ்வரமுடையார் கோயில் வழிபாட்டுச் செலவினங்களுக்கும் மற்றும் பராமரிப்புக்காகவும் தென்னாற்றுப் பற்று நாட்டவர்கள் சிவிறி என்ற ஊரினை வரி நீக்கித் திருநாமத்துக்காணியாக வழங்கியுள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் சீ குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு ௨௰௭ ம் புதன்கிழமை பெற்ற வ[illegible]ணர்வ[illegible]சத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து வெண்குன்றக்–

2. கோட்டத்து விடாற் பற்றான விக்கிரம பாண்டிய வளநாட்டு விடாலில் உடையார் கறைக்கண்டீசுவரமுடைய நாயனாற்கு இன்னாட்டுத் தென்னாற்றுப் பற்று நாட்டவரோம் இன்னாயனார்க்குப் பூசைக்கும் திருப்பணி–

3. க்கும் எங்கள் நாட்டில் சிவிறி திருநாமத்துக்காணி இறையிலியாகத் தந்தோம் இ[வ்]வூர் நாற்பாற்கெல்லைக்கும் உட்பட்ட நன்செய் புன்செய் மாவடை குளவடை புறவடை ஏரிவாய் புறவடை நத்தந் தரிசு களர் திடர் தறியிறை தட்டா–

4. ர பாட்டம் செக்கிறை காசாயவற்கம் மற்றும் எப்பேர்பட்டனவும் உட்பட திருநாமத்துக்காணியிறையிலியாகத் தந்து இப்படிக்கு வநூாதித்தவரையும் செல்லக் கல்லிலும் செம்பிலும் வெட்டி இ[வ்]வூர் நான்கெல்லையி–

5. லுந் திருச்சூலஷூாபனமும் பண்ணித் தந்தோம் தென்னாற்றுப் பற்று நாட்டவரோம் இப்படிக்கு நாட்டார் பணியால் இவை தொண்டை மண்டலப் பிரமராயன் எழுத்து

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	: 13+3
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1318
ஊர்	: வெடால்	இ.க. ஆண்டறிக்கை	: 69/1908
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 6
அரசன்	: சடையவர்மன் சுந்தரபாண்டியன்		
இடம்	: நீலகண்டீஸ்வரர் கோயில் கருவறை அர்த்தமண்டப தென்புறப்பட்டிகை.		

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து விடால் பற்று எனும் விக்கிரமபாண்டிய வளநாட்டு விடால் ஊரில் அமைந்துள்ள கறைகண்டீஸ்வரமுடைய நாயனார்க்கு மலைப்பற்றில் பெருமுகைப் பற்றைச் சேர்ந்த நாட்டவர்கள் நங்கையார் ஏந்தல் என்ற ஊரை பூசை மற்றும் திருப்பணிக்காக திருநாமத்துக்காணியாகக் கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோனேரிமேல் கொண்டான் கோற்சடபன்மர் திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு பதின்மூன்றாவதின் எதிர் மூன்றாவது கற்கடக நாயற்று ௳௵வ௲வக்ஷத்து ஸஹமியும் புதன்கிழமையும் பெற்ற அத்தத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோ–

2. ட்டத்து விடாற் பற்றான விக்கிரம பாண்டிய வளநாட்டு விடால் உடையார் கறைக்கண்டீசுவரமுடைய நாயனார்க்கு மலைப்பற்றில் [பெரு]மு[கை]ப்பற்று நாட்டவரோம் இன்னாயனார்க்கு பூசைக்குந் திருப்பணிக்கும் எங்கள் நாட்டில் நங்கையார் ஏந்தல் திருநாமத்துக்காணி யிறையிலியாகத் தந்தோம் இவூர் நாற்பாற்கெல்லைக்குள்–

3. பட்ட நன்செய் புன்செய் மாவடை குளவடைப் புறவடை ஏரிவாய்ப் புறவடை நத்தந் தரிசு களர் திடர் தறியிறை தட்டார்ப்பாட்டம் செக்கிறை காசாயவற்கம்

மற்றும் எப்பேர்ப்பட்டனவும் உட்பட திருநாமத்துக்காணி யிறையிலியாகத் தந்து இவூ(ர்) சந்ராதித்தவரையுஞ் செல்வதாகக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டி இவூர் நான்–

4. கெல்லையிலுந் திருச்சூலஸ்தாபனமும் பண்ணித்தந்தோம் பெருமுகைப்பற்று நாட்டவரோம் இப்படிக்கு நாட்டவர் பணியால் இவை நாட்டுக்கணக்கு விசையராயன் எழுத்து

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	5
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1168
ஊர்	: வெடால்	இ.க. ஆண்டறிக்கை:		71/1908
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்:		7
அரசன்	: இரண்டாம் இராஜாதிராஜன்			
இடம்	: நீலகண்டீஸ்வரர் கோயில் கருவறை அர்த்தமண்டப தென்புற முப்பட்டைக் குமுதம்.			

குறிப்புரை : உத்தமசோழ வளநாட்டு சிங்கபுரநாட்டு விடார் என்னும் ஊரில் உள்ள கறைகண்டீஸ்வரமுடையார்க்கும் சந்திவிளக்கு எரிப்பதற்காக கழுமலன் என்பவன் கொடுத்த 4 பசுக்களை இக்கோயிலில் காணி உடைய இருசிவபிராமணர்கள் பெற்றுக்கொண்டு விளக்கெரிக்க ஒப்புதல் அளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் சீரீ இராஜாதிராஜ தேவற்கு யா[ண்டு] ரு ஆவது உத்தமசோ–
2. ழ வளநாட்டு சிங்கபுர நாட்டு [விடார் திருக்கறை]கண்டீஸ்வரமுடையாற்கு கழுமலந் கீழ்த்தித்தாண்டி வைத்த ச–
3. ந்தி விளக்கொன்றுக்கு விட்ட பசு நாலுங் கொண்டு இக்கோயில் காணியுடைய ஶிவப்ராஹ்மணந் சுஹிமாந சிங்கபட்டன்னும் ஸங்மா–
4. யரப் பட்டன்னும் . . .

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1190
ஊர்	: வெடால்	இ.க. ஆண்டறிக்கை:		70/1908
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்:		8
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்			

இடம் : நீலகண்டீஸ்வரர் கோயில் கருவறை அர்த்தமண்டபம் இடைக்கட்டு தென்புறக்குமுதம்.

குறிப்புரை : கறைகண்டீஸ்வரமுடையார் கோயிலில் ஸ்ரீஅமைசெட்டி மகன் பெரியான் என்பவன் சந்திவிளக்கெரிக்க 4 பசுக்களைக் கொடுத்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கொலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு ௰௨ ஆவது விடால் கறைக்க–
2. ண்டீச்சரமுடையாற்கு ஸ்ரீஅம்மைசெட்டி மகன் பெரியான் வைச்ச சன்தி விள[க்]கொன்–
3. றினால் பசு நாலு

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	சகம் 1314
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1392
ஊர்	:	வெடால்	இ.க. ஆண்டறிக்கை:		76/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	விஜயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்:		9
அரசன்	:	விருப்பண்ணஉடையார்			
இடம்	:	நீலகண்டீஸ்வரர் கோயில் மகாமண்டப கிழக்குபுற இடதுபுறச்சுவர்.			

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து சிங்கபுரநாட்டு பொன்னூர் பற்றில் இடம் பெற்றிருந்த விடால் என்னும் ஊரில் அமைந்துள்ள கறைகண்டீஸ்வரமுடையார் கோயில் இறைவனுக்கு அமுதுபடி, நந்தாவிளக்கு, வழிபாடு மற்றும் கோயில் பராமரிப்பு செலவுகளுக்காக திருமணவில் ஏந்தல் என்ற ஊரின் வரிவருவாய் கொடுக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ . . . ஹரிராய விஹாடநு ஹரியண உடையார் குமாரர் விருப்பண உடையார்
2. . . . சகாப்தம் ன் மேல் செல்லா நின்ற ஆங்கிரஸ[ஸ] வஷத்து வ்ருஷிக நாயற்று . . . . .
3. அஷ்டமியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற மகத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து
4. . . . [சிங்]கபுர நாட்டு பொன்னூர் பற்று விடால் உடையார் கறைகண்டீஸ்வரமுடைய நாயனார்க்கு
5. . . . ஸந்திக்கு அமுதுபடி திருநுந்தாவிளக்கு ஒன்றுக்கும் பூசை திருப்பணிக்கும் இராமதேவராயன்
6. . . . தேவரணையார் குடுத்த பொன்னூர் பற்று திருமணவில் ஏந்தலான முருக[மங்கல]த்து[க்கு]

7. . . . வடக்கு புறவடையும் இன்னாயனாற்கு . . . லை முற்றும் தாம் வேண்டும் . . . . .

8. கெல்லையில் [மிருகை]யாக கொண்டு கடமை பொன்வரி வாசல் பணம் தறிகடமை பேர்க்கடமை

9. . . . . மாவடை, மரவடை இப்பற்றில் கொள்ளும் பலவரிகளும் பல உபாதிகளும்

10. . . . . . கொல்லை இறை . . . .

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	சகம் 1329
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1407
ஊர்	:	வெடால்	இ.க. ஆண்டறிக்கை:		75/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	விஜயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்:		10
அரசன்	:	பூபதிராயர்			

இடம் : நீலகண்டீஸ்வரர் கோயில் மகாமண்டப வாயிலின் உட்புறம்.

குறிப்புரை : கறைகண்டீஸ்வரமுடையார்க்கு 2 நந்தாவிளக்குகள் எரிக்கவும் 'துணையிருந்தான் சந்தி' என்ற பூசை வழிபாடு நடத்தவும், 'பொய்யாத பிள்ளையார்'க்கு ஒரு நந்தாவிளக்கெரித்து பணியாரம் படைக்கவும், பராமரிப்பு செலவுக்கும் செம்பந்தை துணையிருந்தான் விருப்பாதராயக் காங்கயர் என்பவர் பூதேரி நீர்பாசனத்தில் உள்ள நிலங்களின் வரிவருவாய் ஒதுக்கிக்கொடுத்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீமந் மஹாமண்டலேஸ்வரந் அரியராய விபாடந் பாஷைக்குத் தப்புவரா–
2. யர் கண்டந் மூவராய கண்டன் ஸ்ரீவீரதேவ ராயன் ஸ்ரீமந் குமாரர் பூபதிராய உடையார்
3. ப்ருதிவி ராஜ்யம் பண்ணி அருளாநின்ற காலத்துச் செல்லா நின்ற சகாப்தம் ௲௩௱௨௰௯ன்
4. மேற் செல்லா நின்ற ஸர்வஜித் வருஷத்து மகர நாயற்று பூர்வ பக்ஷத்து சதுர்த்தியும் வியாழ–
5. கிழமையும் பெற்ற புணர் பூசத்து நாள் ஆர்க்காமூற் செம்பந்தை துணையிருந்தான் விருப்பராயக் காங்கயர் ஜய–
6. ங் கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்துச் சிங்கபுர நாட்டு பொன்னூற் பற்றில் விடாரில்

7. உடையார் கறைக்கண்டீஸ்வரமுடைய நாயனாற்குத் துணையிருந்தான் சந்திக்கும் திருநுந்தாவிளக்கு

8. இரண்டுக்கும் பொய்யாத பிள்ளையாற்குத் திருப்பணாரத்துக்கும் திருநுந்தாவிளக்கு ஒன்றுக்குற் திருப்பணி–

9. க்கும் சந்த்ராதித்தவரையும் செல்லப் பொன்னூற் பற்றுப் பூதேரியெல்லையில் விட்ட கீழ்பாற்கெல்லையில்

10. களருக்கும் தண்டு கரைக்கும் மேற்கு தென்பாற்கெல்லை இலங்கே தேவனேந்தலெதிர் வாயிற்ச் சூல–

11. ஸ்தாபனத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை இன்னாயனார் திருநாமத்துக்காணி விடாரெல்லைக்குக் கிழக்கும் வடபா–

12. ற் கெல்லை நெற்குன்றதெல்லையில் [தீப]புறவடைக்குத் தெற்குமாக இன்னான் கெல்லைக்குட்பட்ட நிலமும் கீ–

13. ழ்னோக்கின கிணறும் மேனோக்கின மரமுங் கைக்கொண்டு எல்லை முற்றுந் தாம் வேண்டும் பயிற்செய்–

14. து கொண்டு கடமை பொன்வரி காணிக்கை யுபாதியும் பல பொன்வற்கமும் பல நெல்வற்கமு மிப்பற்றை

15. னோக்கிக் கொள்ளும் பலவரிகளும் பல உபாதிகளுமுட்பட ஸர்வமாந்ய இறையிலியாக திருநாமத்து–

16. க் காணியாக சந்த்ராதித்தவரையுஞ் செல்ல விட்டோம் இவை விருப்பராய காங்கயர் எழுத்து

மாவட்டம் : திருவண்ணாமலை

வட்டம் : வந்தவாசி

ஊர் : வெடால்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : –

அரசன் : –

ஆட்சி ஆண்டு : –

வரலாற்று ஆண்டு : 16–ஆம் நூற்

இ.க. ஆண்டறிக்கை: 81/1908

முன் பதிப்பு : –

ஊர்க் கல்வெட்டு எண்: 11

இடம் : நீலகண்டீஸ்வரர் கோமில் மகாமண்டப வாமிலின் உட்புறம்.

குறிப்புரை : திருமலை நாயக்கரின் நன்மை வேண்டி சாத்தைய தேவர் என்பவருக்கு 'திருநீலகண்டநாயனார் மடம்' கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ளச் செய்தி.

கல்வெட்டு :

1. விசைய வருஷம் சித்திரை உ திருமலை
2. நாயக்கர் புண்ணியம் தேவ[ராச] சா–
3. த்தைய தேவற்கு நீலகண்ட னாயனார்
4. மடம் தாரைவாத்துக் குடுத்தோம் இதுக்கு
5. அஹிதம் பண்ணினவன் கெங்கைக் க–
6. ரையில் காராம் பசுவை கொன்ற [தோஷத்தில்] போ
7. வார்

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	15–ஆம் நூற்
ஊர்	:	வெடால்	இ.க. ஆண்டறிக்கை:		79/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்:		12
அரசன்	:	–			
இடம்	:	நீலகண்டீஸ்வரர் கோமில் முன்மண்டப வடக்குச்சுவர்.			

குறிப்புரை : கைவலான தனியாண்டை வல்லான் காச்சுகட்டி அன்று வரா கண்டன் சேனை என்ற படைப்பிரிவுக்கு மனையும் மனைப்படைப்பையும் காணியாக ஆதிசண்டேஸ்வரர் பெயரில் ஊர் நிர்வாகத்தினரால் வழங்கப்பட்ட சிறு முறி (உடன்படிக்கை) ஆவணம்.

கல்வெட்டு :

1. ஆதி சண்டேசுரன் திருவாய் மலந்தருளினபடிக்கு [॥]* குஞ்சர மல்லர்க்கு சிறுமுறி விடால் உடையாரான
2. கறைகண்டீ[சு]ரமுடைய நாயினார் திருநாமத்துக் காணி பரிதாபி வருஷாம்[1] ஆவணி மாதம் முதல்
3. தங்களுக்கு தெருவாக சம்பந்தப்பெருமாள் நாயனார் கோயிலுக்கு வடக்கு கீழ்சிறகு மடமாக முக்கோல்
4. கறை விட்டு வடக்கும் மேல் சிறகு கல்லுக்கு வடக்கும் வாணியந் வானீளத்துக்கு கிழக்கும் வடக்கு
5. கழனிக்காலுக்கு தெற்கும் கிழக்கு திருநந்தவனத்துக்கு மேற்கும் உட்பட்ட மனையும் மனைப்படைப்பை–

1. வருஷம் என்று படிக்கவும்

6. யும் கைவலான தனியாண்மை வல்லான் காச்சுகட்டி அன்று வராகண்டன் சேனைக்கும்

7. இவர்களுக்கு காணி ஆக குடுத்தோம் உ [॥]*

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு :	14
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு :	–
ஊர்	:	வெடால்	இ.க. ஆண்டறிக்கை:	82/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு :	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	:	பல்லவர்	ஊர்க் கல்வெட்டு எண்:	13
அரசன்	:	நந்திவர்மன்		
இடம்	:	மலைமீதுள்ள ஆண்டார் மடம் அருகிலுள்ள பாறை.		

குறிப்புரை : பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தில் விடார் ஊரில் இருந்த சமணக் கோயிலுக்கு (பள்ளி) இரண்டு பட்டி நிலத்தினை சிங்கன் சத்திமலை என்பவன் கொடுத்துள்ளான். மேலும், இதே கல்வெட்டில் திருநலுங்கொண்டை என்ற ஊரில் இருந்த மேலைப்பள்ளி என்னும் சமணப் பள்ளியை, அதிகாரியான (மாமுதலி) பேரயர் என்பவர் சீரமைப்புச் செய்து கொடுத்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்ரீயாண்டு பதினாலாவது நந்திக்கு . . . . .
2. விடார் பள்ளிக்கு சிங்கள[1] சத்திமலை சத் . . .
3. . . ற்று ஊ[ரா]ற் பட்டியும் விடால் இரண்டு . . .
4. பட்டியும் குடுத்தாள் . திருநலுங்கொண்டை மேலைப்–
5. பள்ளி மாமுதலடிகள் விழி . . . .
6. . . ப் பேராய[ர்] புதுக்கு [।।]*

1. சிங்கன் என்று படிக்கவும்

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	9–ஆம் நூற்
ஊர்	:	வெடால்	இ.க. ஆண்டறிக்கை:		83/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்:		14
அரசன்	:	–			

இடம் : மலை மீதுள்ள ஆண்டார் மடம் அருகிலுள்ள பாறை.

குறிப்புரை : மாதேவி ஆராந்தி மங்கலத்து சமணப் பள்ளிக்கு திருவிளக்கு வைக்க தமிழ்வேளார் என்பவரிடமிருந்து கழஞ்சுப் பொன்னினை இப்பள்ளியில் இருந்த கனகவீரகுறத்தியர் மற்றும் இவரது மாணாக்கிகளாலும் பெற்றுக்கொண்டு விளக்கெரிப்பதாக சம்மதித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. மாதேவி[ஆந ந]ந்தி மங்கலத்து
2. பள்ளிக்கு தொ . . டு . . . . ட்டி . . .
3. . . ட்டி . . ான . . . தேவன் [க]ழை
4. ஞ்சு பொ[ந்] . . . . பொந் . . . . இப்பொந் . . .
5. . . ஆடியில் தி[ரு]விளக்கு வச்ச . . . . .
6. . . மாதேவி ஆராநந்[தி]ம–
7. [ங்]கலத்து பள்ளி உடைய . . . .
8. கநகவீரக்குர[த்]தியர் வழி மாணாக்கிகளாயிலு[ம்] இத்திரு விளக்கு
9. நெய் முட்டாமே அட்டி எரிக்கக்கடவ முன்றா–
10. ய் இட்டதேவன் தளி வைச்ச தண்ட[ப்] படுவர் . . . .

11\. . . . மாதேவி ஆராந்[தி]மங்கலத்து பள்ளியுடை[ட]*ய செம்பியந் . . .

12\. தமிழ்வேளார் நி[றி]த்திற பரிசாவது புலைய்யூர்ருடையாந் திருப்பூர்

13\. நக்கன் மகந் ஏ[ழு]டி வச்சய॰ஊம் எண்ணெய்க் காணமும் புதா நாழியும் கொண்டு . . . . . .

14\. [கெ]*ங்கை இடை குமரி இடை [செய்]தார் [செய்]த பாவங்கொள்வார் [||]*

மாவட்டம் : திருவண்ணாமலை
ஆட்சி ஆண்டு : 14
வட்டம் : வந்தவாசி
வரலாற்று ஆண்டு : பொ.ஆ. 885
ஊர் : வெடால்
இ.க. ஆண்டறிக்கை: 84/1908
மொழி : தமிழ்
முன் பதிப்பு : தெ.க.தொ. 13/245
எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்
அரசு : சோழர்
ஊர்க் கல்வெட்டு எண்: 15
அரசன் : இராஜகேசரிவர்மன் (முதலாம் ஆதித்தன்)
இடம் : ஆண்டார் மடம் குகைத் தள முகப்பு.

குறிப்புரை : –

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவி ராசகேசரி பர்உ[ர்]க்கு யாண்டு பதிநாலாவது சி–
2. ங்கபுர நாட்டுக் கீழ்வழி விடால் மா[தே]விஆராந்தி மங்கல–
3. . . . டநுங் கிழாநும்முடைய குணகீர்த்தி படாரர் வழி மாணாக்கியார் கனகவீரக்குரத்தி–
4. . . . . யும்மவர் வழி மாணாக்கியாரையும் . . . . . யாற்றுவர்க்கும் . . .
5. ராந்திமங்கல முடையாரையும் மவர் வழி மாணாக்கியாரையும் . . ிரு நூற்றுவரயும்
6. கநக வீரக்குரத்தியார் இவகள்[ளாத]மையில் இக்கயற் விளை [நா] நூற்றுக்கும் வழி . . ங் –
7. கன்மிகள்ளாதநமையில் காத்தூட்டுவோமானோம் எங்களுடைய ஸ்ரக்ஷ இது [ரக்ஷி][ப்] பாரடி நி . . .
8. இது [வல்]லன் ந[ன்]றுடல் மேலன மாதேவிஆராந்திமங்கலமுடைய க[ன]கவீரக்குரத்தியார்

9. . . . வில் இதனை திறுத்தவலவர் மகளா[த]னமையில் ஆச வல்லவர் . . .

10. இடை முக்கியருமிது காப்பா

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	19
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 925–26
ஊர்	:	வெடால்	இ.க. ஆண்டறிக்கை	:	85/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	16
அரசன்	:	முதலாம் பராந்தகன்			
இடம்	:	ஆண்டார் மடம் முன்மண்டபத் தூண்.			

குறிப்புரை : விண்ணகர் வயிரமேகன் என்பவன் களாமுக சைவப்பிரிவைச் சார்ந்த தசபுரியன் என்பவனுக்கு தானமளித்துள்ள செய்தி. சிங்கபுர நாட்டு கீழ்வழியில் அமைந்துள்ள மந்தபுரம் என்னும் ஊரினை பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மதி[ரை]கொண்ட கோவி ராசகேசரி பன்மற்கு யாண்டு ௰௯ ஆவது விண்ண[கர்]–
2. வயிரமேகனென் ஹாரித கோத்ரத்து [ஹா]வஸ்தம்ப[1] ஸூத்ரத்துக் காளாமுக
3. தசபுரீயந்னுக்கு சிங்கபுரநாட்டு கீழ்வழி மந்தபுரத்தை வயிரமே
4. . று கொண்ட . . . . ண்டுர் சயமலி·ங·ஷுரநதனை . . .

1. ஆபஸ்தம்ப என்று படிக்கவும்

மாவட்டம் : திருவண்ணாமலை

ஆட்சி ஆண்டு : 5

வட்டம் : வந்தவாசி

வரலாற்று ஆண்டு : பொ.ஆ. 969–70

ஊர் : சீயமங்கலம்

இ.க. ஆண்டறிக்கை: 60/1900

மொழி : தமிழ்

முன் பதிப்பு : தெ.க.தொ.VII/64

எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்

அரசு : சோழர்

ஊர்க்கல்வெட்டு எண்: 1

அரசன் : இரண்டாம் ஆதித்தன்

இடம் : தூணாண்டார் கோயில் வலது முன் மண்டப வடக்கு சுவர்.

குறிப்புரை : ஸ்ரீபாண்டி நாட்டு வேசாலிப்பாடி வடகரை கீழ்கூர் நாட்டுப் பிரிவில் உள்ள புல்லாலி என்ற ஊரில் உள்ள வெள்ளாளன் இனத்தைச் சார்ந்த காளிபூண்டி என்பவன் ஜயங்கொண்டசோழ மண்டலத்து பல்குன்றக்கோட்டத்து தென்னாற்றூர் நாட்டுப் பிரிவைச் சேர்ந்த சீயமங்கலம் ஊரிலுள்ள திருக்கற்றளி மகாதேவர் கோயிலில் ஒரு நந்தா விளக்கெரிக்க 10 மா நிலத்தினை சீயமங்கலத்து ஊராரிடம் விலைக்கு வாங்கி தானமாக வழங்கியுள்ளான். இந்நிலத்தின் மீது வசூலிக்கப்படும் சில்லிறை, சோறுமாடு, வெட்டிமுட்டையாள், செந்நீர் அமஞ்சி உட்பட அனைத்து வரிகளுக்குமான உரிய தொகையும் செலுத்தப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பற்மற்க்கு யாண்டு ஐஞ்சாவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்து தென்னா–
2. ற்றூர் நாட்டு சீயமங்கலத்து திருக்கற்றளி மஹாதேவற்க்கு ஸ்ரீபாண்டிநாட்டு வேசாலிப்பாடி வடகரை கீழ்கூர் நாட்டுப் புல்லா[லி] வெள்–
3. ளாளன் காளிபூண்டியேன் வை[வ]த்[த] திருநுஞாவிளக்கு ஒந்றுக்கும் கொண்டு விட்ட நிலமாவது பெரிஏரிப் பெருந்தூம்பின் பெருவா[ய்]க்கால் கீழ் மேல்ப்புற்ற–
4. ம்புலத்துப் பெருமணலிப் பெருஞ்செறு எட்டு மாவும் ந[ஞ்ஜி]முழான்–

5. தூம்பில் நஷிமுழான் வாய்க்காலின் தென்பாற் கிடஷிவிட்டில் குண்டில் இரண்டு மாவும் ஆக நிலம் பத்து மா[வு]ம் சீயமங்கல–

6. த்தூராரிடைப் பொன்னற இட்டு மண்ணறக்கொண்டு விட்டேன் இந்நிலத்துக்குச் சில்லிறை சோறுமாடும் வெ[ட்]டி [முட்]–

7. டைஆளும் செஞ்ஞீரமஞ்சியும் மற்றும் எப்பேர்பட்டன காட்டவும் சொல்லவும் பெறாதோமாகவும் இந்நிலத்துக்கு பொன் ன[றக்] கொ–

8. ண்டு விலைஅற விற்று குடுத்தே[ா]ம் சீயமங்கலத்தூரோமேய் செலுத்துவிப்பதாக பொன்னறக்கொண்டு மண்ணற விற்றோம் சீயமங்கலத்தூரோ–

9. ம் இது பன்மாஹெஶ்வர ரக்ஷை அறமறவற்க்க இது காத்தான் ஸ்ரீபாத மென் தலை மேலின

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	20
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1198
ஊர்	:	சீயமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை	:	61/1900
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.க.தொ.VII/65
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்கன்			
இடம்	:	தூணாண்டார் கோயில் திருச்சுற்று கிழக்குச் சுவர்.			

குறிப்புரை : சீயமங்கலத்து தூணாண்டார் கோயிலில் இரண்டு திருநந்தா விளக்கெரிக்க நிலம் கொடையாக வழங்கப்பட்டுள்ளது. குலோத்துங்கசோழச் சம்புவராயர் தூணாண்டார் கோயிலில் வடக்கு திருச்சுற்று மாளிகை எடுக்கும் போது, கல்வெட்டுள்ள கற்கள் அதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதால் அக்கல்வெட்டு படியெடுத்து தற்போதுள்ள சுவற்றில் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவந[ச்]சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவற்கு உ௰[வது] சீயமங்கலத்து உடையார் தூணாண்டார் கோயில் வடவிசைத் திருமாளிகை குலோத்துங்கசோழச் சம்புவராயர் திருக்கற்றளி

2. [செய்வி]த்[த]லால் இந்த விசையில் நிலம் அட்டி நிலங்களில் கல்களில் உள்ளூரில் தேவதாநமாந நிலங்களுக்கு கல்வெட்டி [தீத்த]லால் இக்கல்கள் அடித்துத் திருப்பணி செய்ய உ௰[வது ப]டியெடுத்து கல்லுவெட்டிநபடி இந்னாயனாற்கு ராஜாக்க–

3. ள் விட்டும் ராஜமுதலிகள் பொன்நிட்டு கொண்டும் தேவதானமாக விட்ட [நி]லமாவது மே[ம]ட்டு [வ]ாய்க்காலுக்கு வடக்கு ஆவா[ர]க்குண்டில் தடி ந னால் கூ நா சூந் டெக்கு நத்தநாறுகால் கூ நா காய் காலுக்கு கெ தேரோடுதுறை கூ சா உ௰

4. சூந் கெ நால்கால்குண்[டில்]கூ அய சூந் டெகுண்டில் கூ நா சூந் டெ ஏரிகிழ்வாது கூஎய சூந்கெ சேனைக்குறைக்குண்டில் கூ ாகூய கெ மேல்படி செறு கூ நா சூந் கெக்கு மணலி கூ ரு உய சூந்

5. கெ பிராட்டிசெறு கூ ருாநய சூந் கெ தூம்படிபள்ளவாதுக்குமடு கூ அய சூந் கெ வஞ்சிப்பெருஞ்செறு கூ எாஉய சூந் டெ ஆதித்தவாரப்பட்டி கூ சாஉய இங்குவிட்டு வடக்கு விசையாலயசோழ ஸ்ரீ

6. ஹூசாரமாயன் பொன்னிட்டுக் கொ[ண்]*டு விண்ணப்பம் செயிது திருநன்தாவிளக்கு இரண்டுக்கு விட்ட நிலமாந மாங்கழுவல் கூ ாகூய சூந் வடக்கு ஆனைப்பட்டி கூ ாஎய[உ] சூந் கிடக் கல்குண்டில் கூ ாநயரு சூந் வ[டக்]கு

7. தோயவணக்குண்டில் கூ சயஉ சூந் டெ குண்டில் உட்பட தெங்கஞ்செறு கூ[ந]ாந சூந் வடக்கு மேலைவிளாஞ்செறு கூ [உ]ா[உய] சூந் டெ மாங்குண்டில் தடி உ–னால் கூ ா[எ]யக இங்குவிட்டு [பள்ளவாய்க்காலுக்]கு

8. கீ பள்ளத்து விளக்குப்பட்டி தடி உ–னால் கூ அாயச ஆக கூ உகூ சயரு இங்குவிட்டு மேட்டுவாய்க்காலுக்கு தெ மஞ்சிநாறுகால் கூ எய சூந் கெ கீழை விளாஞ்செறு கூ [ந]ாஉய சூந் கெ . . . ® மேட்டுபாக்கங் கூ நா

9. சூந் கீ வதிக்கரை கொடுமாடி கூ ாநயரு [இ]ங்குவிட்டு கெவதிக்கு கீ நிகரிலீசுரமுடையார் தேவதாநம் கார்முகவின் கூ ஊாயச–ம் இங்குவிட்டு ஆதிச்சவாரபட்டிக்கு தெ பிரகாறந் நன்தவாநமேடு கூ ருாஉய சூந் தோட்டங் கூ . . உய

10. சூந் தெ அம்மைஅப்பன் திருநஷவநம் கூ நா சூந் தெ நஷவநக்குண்டில் கூ ாநயரு சூந் கிழக்கு தடி க விட்டு விளக்குப்பட்டியாந மணலிக்காலில் கலிச்ச தடி ந–னால் கூ ருாஅய சூந் கீ இலவஞ்செறு கூ ஊாசய சூந் வடக்கு பட்டினகுண்டில் கூ ஊாஉய சூந் டெ

11. [சேர]லந்குண்டில் உட்பட கூ நா சூந் காலுக்கு கீ கணவதிகுண்டில் கூ ாருயரு [இ]ங்குவிட்டு கீழைவதிக்கு கீ பள்ளச்செறுத் தடி உ–னால் கூ தூாஉய . . வதிக்கு மேல்வண்ணக்கன்கழுவல் கூ ஊாகூய சூந் கீ முடங்கு கூ நாநய சூந் கீ மொடிகுண்டில் கூ ாஅய சூந் கீ

12. பெருங்குடிசெறு கூ சாசய சூந் வட பாடுவான்குண்டில் கூ ாஉய இங்குவிட்டு கூ மே[ல்]தலை நடுவுநிலைகல்லு நிற்கும் இலுப்பைகழுவல் கூ சா இங்குவிட்டு ெடகாலுக்கு தெற்கு நீரோடுகழுவல் கூ ஙாஉய சூந் ெடகல்குண்டில் [கூ] ாஎய [இது]

13. பநூாஹெபஜ்ஜர ரமெக்ஷ: உ

---

1. இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குறியீடான கூ, சூந், கீ, ெட,ரு, தெ முறையே குழி, இதன் கீழ், மேல், வட, தெற்கு என்பதைக் குறிப்பதாகும்

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	24
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1202
ஊர்	:	சீயமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை	:	62/1900
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.க.தொ.VII/66
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்கன்			
இடம்	:	தூணாண்டார் கோயில் கிழக்கு சுவர்.			

குறிப்புரை : குலோத்துங்கசோழ சம்புவராயர் இவ்வூரிலிருந்த பல்வேறு நிலங்களில் 12 வேலி நிலமும், பழைய தேவதானமாக இருந்த 8 வேலி நிலமும், மஞ்சல் பட்டில் இருந்த இக்கோயில் தேவதான நிலமாக இருந்த 2½ வேலி நிலமும் ஆக மொத்தம் 22½ வேலி நிலத்தினை சீயமங்கலத்து தூணாண்டார் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கியுள்ளார்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு உயச–வது பிள்ளையார் குலோத்துங்கசோழச் சம்புவராயர் உடையார்

2. தூணாண்டாற்கு தேவதாநமாக சீயமங்கலத்து இட்ட நிலம் பன்னிருவேலிக்கு தடி உள்வரி ஏரிகீழ் பெருந்தூம்படி சிரமந் குழி இதந் வடக்கு கமுகுகொள்ளி குழி ஊாகூய

3. கிழக்கு நமஶ்ஶிவாயம் குழி ஙாஙய இதந் வடக்கு[ச்] சாத்திசெறு தடி உ னால் கூ எாஙய தடி க விட்டு வடக்கு வல்லிடும்பந் தடி உ னால் கூ எாசய இங்குவிட்டு வட[க்]*கு ஆத்திக்குண்டில் கூ ாஉய

4. இதந் வடகுண்டில் கூ அய இதந் வடபுஞ்சி கூ ஊாஉய இதந் தெற்கு குண்டில் கூ கூய இதந் டெ குண்டில் கூ ாய வாய்க்காலுக்கு வட குண்டில் கூ கூய வதிஇ கீ ஆதிச்சந்செறு கூ அாருய இதந் கீ சாணன்–

5. [தி]ருத்து கூ ாஅய இதந் ௳ நஞ்சிமுழாந் கூ நாகூய இங்[கு]*விட்டு கீ ஐம்பதிற்றங்காமி கூ நா இதந் கீ பாப்பாந்பட்டி கூ நாஎய இதந் கீ பப்பநப்பன் கூ [கூ]ா இங்குவிட்டு நடுவில்வதிஙு கீ முருக்கஞ்செறு கூ நா இதந் கீ தான்[றி]–

6. செறு கூ ஊாசய இதந் கீ[ழ்] தாந்றிக்குண்டில் கூ ாகூய இதந் கீ பிராங்குண்டில் கூ ஊாசய இங்குவிட்டு தெந்டெ வாகைச்செறு கூ கூா [இ]தந் கெ பூவஞ்செறு கூ நாகூய இதந் வடகீ தெங்கஞ்செறு கூ ஊாஅய இதந் வடக்கு மண்ணிலிகழுவல் கூ ா இதந் கீ வேப்பங்குண்டில் கூ ாநய இதந் கீ

7. [வ]ஞ்சிகழுவல் கூ [உ]ாஅய இதந் கெ தேவர்கண்டப்பெருஞ்செறு கூ ஊாகூய இதந் கீ குண்டில் தடி உ–னால் கூ கூய இதந் ௨ கரிக்குண்டில் கூ ாருய இதந் ௨ அச்சஞ்செறு கூ நா இதந் கெப் பெருங்குடிசெறு கூ சாஉய இதந் கீ ஆலஞ்செறு [கூ] நா இதந் கீ

8. ஆத்திக்குண்டில் தடி உ–னால் கூ ஊாஎய இதந் கீ ஆத்திக்குண்டில் தடி உ–னால் கூ ாருய இதந் ௨ ந(ன்)ஞிமுழாந்குண்டில் உட்பட கூ ருா இதந் கெ [ம]லையாளன்குண்டில் தடி உ–னால் கூ நா இதந் கீ அடைச்சேற்றங்குண்டில் கூ எ[ா]ய இதந் கீ பருப்பைக்கழுவல் கூ ஊா இத–

9. ந் ௨ நஞிமுழாந்குண்டில் கூ [எ]ாய இதந் ௨கால் கண்டராதித்த[த்]*து தடி பலவினால் கூ ருா இதந் கெ ஏத்தச்செறு கூ ருா இதந் கீ குண்டில் கூ அய இதந் ௨ குண்டில் கூ [ா]உய இதந் குண்டில் கூ ாசய இதந் கீ குண்டில் கூ ாஉய இதந் கீ ஆத்திச்–

10. செறு கூ நா இதந் டெ முடப்பளிக்குண்டில் கூ [ா]உய இங்குவிட்டு டெ [எ]ருவம்போகி கூ ருா இதந் டெ எருவம்போகி கூ நா இதந் டெ அச்சங்குண்டில் கூ ாஎய இங்குவிட்டு டெ பெக்கழுவல் கூ நா இதந் கெ செரிசாத்தி கூ ருா இதந் கீ செரிசாத்தி கூ கூா இதந் கீ மன்றாடிகுண்டில் தடி ந–

11. னால் கூ நா இதந் கீ கோயிலான்பட்டி கூ அா இதந் கீ கோயிலான்பட்டி கூ ஊாருய இதந் கீ பள்ளிச்செறு கூ ருா இதந் கீ வேலஞ்செறு கூ ஊாஅய இதந் கீ வேலஞ்சேறு கூ ஊாசய இதந் கீ பவழத்தாள் கூ [ஊா]சய இதந் கீ [ப்]பவழத்தாள் கூ ாசய இதந் கீப் பவழத்தாள் கூ நா இதந் வடடெ நாவ[ல்]ச்செறு கூ சா இ–

12. ங்குவிட்டு ௳ மதகஞ்செறு கூ நா இதந் ௳ மதகஞ்செறு கூ நா இதந் கெூ மன்றாடிகுண்டில் தடி ந–னால் கூ நாசய இதந் கெூ குராம்பள்ளம் கூ ஊா இதந் ௳ குராம்பள்ளம் கூ ஊா இதந் ௳ குண்டில் உள்பட கூ நா இங்குவிட்டு வடக்கு நிரறுகால்குண்டில் கூ சய ஆக வாசி ஏற்றி கூ உயசகூ –

13. னால் நிலம் பன்னிரண்டு வேலியும் பழ(ந்)ஞ்வதாநம் நிலம் எட்டு வேலியும் ஆக நிலம் இருபது வேலியும் மஞ்சள்பட்டில் இந்நாயநார் தேவதாநம் நிலம் இரண்டரை வேலியும் ஆக நிலம் உயஉஇ இது பன்ஊாஹேமஹ்ர ரகெ்ஷ ॥

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 280/2018

மாவட்டம் : திருவண்ணாமலை		ஆட்சி ஆண்டு :	16
வட்டம் : வந்தவாசி		வரலாற்று ஆண்டு :	பொ.ஆ 1134
ஊர் : சீயமங்கலம்		இ.க. ஆண்டறிக்கை :	63/1900
மொழி : தமிழ்		முன் பதிப்பு :	தெ.க.தொ.VII/67
எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு : சோழர்		ஊர்க் கல்வெட்டு எண் :	4
அரசன் : விக்கிரமசோழன்			

இடம் : தூணாண்டார் கோயில் திருச்சுற்றுமாளிகை கிழக்கு சுவர்.

குறிப்புரை : இப்பகுதி காவல் அதிகாரியாக பணியாற்றும் செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பன் எனும் ராஜேந்திரசோழ சம்புவராயன் என்பவன் தென்னாற்றூர் நாட்டு சீயமங்கலத்து கோமில் தூணாண்டார் இறைவனுக்கு திருஅர்த்தசாம சந்திக்குத் தேவையான அமுது படிக்கு இக்கோமில் தேவதானமாக உள்ள நிலங்களில் காவல் பணிக்காக அளிக்கப்பட்ட வரியினைத் தானமாக வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரமசோழதேவற்கு யாண்டு பதினாறாவது ஜயங்கொண்டசோழ மண்டலத்து பல்குன்றக்கோட்டத்துத் தென்னாற்[றூர்] நாட்–

2. டுச் சீயமங்கலத் தாளுடையார் தூணாண்டார்க்குச் செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பனான ராஜேந்திரசோழச் சம்புவராயனேன் திருவர்த்தயாம ஸந்திக்கு அமு–

3. துபடி உள்ளிட்ட அழிவுக்கு இத்தேவர் தேவதானம் உள்ளூர் நிலமும் அருந்தோடும் சிறுபாடிகாவல் கண்காணி மாப்பதக்கு வெட்டி உள்ளிட்ட சில்லாயங்களால் வந்த நெ–

4. ல்லு ஸ்ரீபண்டாரத்திலே கூட்டி திருவஜ்ஜயாமபூஜையு மமுதுபடியுஞ் சந்த்ராதித்தவரை செல்லும்படி கல்வெட்டி விட்டேன் என் வம்ஸத்திலிக்கடமை கொள்வான் கங்—

5. கையிடை குமரியிடை செய்தார் செய்த பாவங்கொள்வார் இது பந்நாஹேஸ்வர ரக்ஷை ||௨

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	5
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1288
ஊர்	:	சீயமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை	:	134/1956–57
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	பாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
அரசன்	:	விக்கிரம பாண்டியன்			
இடம்	:	தூணாண்டார் கோயில் மகாமண்டப தெற்கு வெளிப்புறச் சுவர்.			

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் நாட்டு விடார் பற்று என்கிற விக்கிரம பாண்டிய வளநாட்டு சீயமங்கலம் எனும் குலோத்துங்கசோழ நல்லூர் ஊரவர்கள் சீயமங்கலம் தூணாண்டார் கோயிலில் உள்ள சுப்பிரமணிய பிள்ளையார் பூசைக்கும் அமுதுபடிக்காகவும் வேண்டி 680 குழி நிலத்தின் மீதான வரிகளை நீக்கி தானமாக வழங்கியுள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மர்கு திரிபுவநச் சக்ரவத்திகள் ஸ்ரீவிக்ரமபாண்டிய தேவற்கு யாண்டு அஞ்சாவது தை மாதத்தொருநாள்
2. ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்துத் தென்னாற்றூர் நாட்டு விடாற் பற்றான விக்ரம பாண்–
3. டிய வளநாட்டு சீயமங்கலம் ஆன குலோத்துங்கசோழ நல்லூர் ஊரவரோம் உடையார் தூணாண்டார்
4. கோயிலில்ச் சுப்பிரமண்ணிய பிள்ளையாற்கு இவ்வூரில் எங்கள் காணி ஆன நிலத்தில் நாங்கள் இவற்குப் பூசை–
5. க்கும் அமுதுபடிக்கும் அனைத்து ஆயமும் இறையிலி தேவதானம் ஆக விட்ட நிலம் ஆவணி கீழை முப்பனங்–
6. கழுவல் கூ ஊா இதன் கிழக்கு கொன்றைக்குண்டில் கூ ளாஅ௰ம் மக்கன் செறுவுக்கு மேற்கு பாடுவான் குண்டிலுக்குக் கி–

7. ழக்கு மன்றாடி குண்டில் கள தடியில் பலவினாற் நாம் ஆக குழி கூாஅய ம் இக்குழி அருநூற்று எண்பதும் அனைத்தாய–

8. இறையிலி ஆகச் சந்திராதித்தவரை செல்வதாக கல்லு வெட்டிக் குடுத்தோம் சீயமங்கலத்து ஊரவரோம் இ–

9. ப்படிக்கு இவை நந்திமுழான் திருஅண்ணாமலை உடையான் ஆபத்துக் காத்தான் எழுத்து இவை நந்தி முழான் குலோ–

10. த்துங்க சோழ மூவேந்த வேளான் முதலி தொண்டைமண்டல நந்தி அராயன் எழுத்து இவை வேம்பனூருடையான் மலை–

11. யன் எழுத்து இவை வினைக்குடையான் திருவெண்காடன் தென்னவன் விழுப்பரையன் எழுத்து

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	5
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1288
ஊர்	:	சீயமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை	:	862/1982-83
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	பாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
அரசன்	:	விக்கிரம பாண்டியன்			
இடம்	:	தூணாண்டார் கோயில் மகாமண்டப தெற்கு வெளிப்புறச் சுவர்.			

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் நாட்டு தேசூர் எனும் கரிகாலசோழ நல்லூர் ஊரவர்கள் தூணாண்டார் கோயிலில் உள்ள சுப்பிரமணிய பிள்ளையார் பூசைக்காக 500 குழி நிலத்தின் மீதான வரிகளை நீக்கி நிலத்தினை தேவதானமாக வழங்கியுள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கிரம பாண்டிய தேவற்கு யாண்டு அஞ்சாவது தைமாதத்து ஒரு நாள் ஜ-
2. யங்கொண்டசோழ மண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்துத் தென்னாற்றூர் நாட்டு விடாற் பற்றா-
3. ன விக்ரம பாண்டிய வளநாட்டு தேசூரான கரிகாலசோழ நல்லூர் ஊரவரோம் உடையார் தூணா-
4. ண்டார் கோயில் சுப்பிரமண்ணியப் பிள்ளையாற்கு இவ்வூரில் எங்கள் காணி ஆன நிலங்களில் விடால்
5. வதிக்குக் கிழக்குக் காலுக்கு வடக்கு வெட்டந . . சூ ராம் இவற்குப் பூசைக்கு இறையிலி தேவதா-
6. னமாக அனைத்து ஆயமும் உட்படக் குடுத்துச் சந்திராத்தித்தவரை செல்வதாகக் கல்லு வெட்டிக்-

7. குடுத்தோம் தேசூரான கரிகாலசோழ நல்லூர் ஊரவரோம் இவை பலாக்காய போதந் துணை–

8. வன் இராசவிச்சாதிரப் பல்லவரையன் எழுத்து இவை காதரை கம்பன் எழுத்து இவை பலாக்காய போதன் வாந–

9. வன் விழுப்பரையன் எழுத்து இவை வேம்பநூர் உடையான் எழுத்து இவை பூசந்தை எழுத்து இவை சொழியாூ

10. கிழவன் எழுத்து கந்த முழாந் அரிந்தவந் விழுப்பரையந் எழுத்து இவை உளவாய்யால் இவ்வூர்

11. ஊர்க் கணக்கு வரத பட்டன் எழுத்து

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 283/2018

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: 13–ஆம் நூற்
ஊர்	: சீயமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 7
அரசன்	: மூன்றாம் இராசராசன்		

இடம் : குடைவரைக் கோயில் அருகே உள்ள (முருகன் கோயில் கீழ்பகுதி பாறை) உள்ள கல்வெட்டு.

குறிப்புரை : கல்வெட்டு பாடல் வடிவில் உள்ளது. இந்த பாடல் சந்த விருத்தப்பாவில் அமைந்துள்ளது. இம்மலையைச் சுற்றி கோயில் யானை திருவீதியுலா வருவதற்காக திருவீதி, நந்தவனம், வடக்கு பகுதியில் மதிள், வாவி, மதகு ஆகியவற்றினை பாரி மன்னனை போல கொடை செய்யும் அம்மைஅப்பன் செம்மை அடைந்த வாரவையான் கிளிவை அதிகமான் செய்தளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னு சீராசராச தேவற்குத் திருந்திய வாண்டாறிக
2. ன்மற சீயமங்கலத்துறதிரு மன்னு பொழிற்றமைச் சாத்துறை வாரதம
3. க்குத் தனியானை மலை சூழ்ந் திருவீதிக்கண்டான் மருமன்னு நன்
4. தவனத்து கோமிற் வடக்கு மதிள் திருவெடுத்து கட்டி மர
5. துஞ் செய்தான் அருளுமன்னு கொடைப்பாரி அம்மைஅப்ப–
6. ன் செம்மை அடைந்தவாரலையன் கிளிவை அதிகமானே

மாவட்டம் : திருவண்ணாமலை		ஆட்சி ஆண்டு	:
வட்டம் : வந்தவாசி		வரலாற்று ஆண்டு	: 15–ஆம் நூற்.
ஊர் : சீயமங்கலம்		இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி : தமிழ்		முன் பதிப்பு	: –
எழுத்து : தமிழ்			
அரசு : –		ஊர்க் கல்வெட்டு எண்	: 8
அரசன் : –			

இடம் : திருநிலை வாசல் கல்வெட்டு.

குறிப்புரை : இக்கோயிலின் நுழைவு வாயிலுள்ள நிலைவாயில் 'கலிங்கத் தரையன் திருவாசல்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. மன்னன்
2. கலிங்க
3. த்தரைய
4. ன் திருவாச
5. ல்

மாவட்டம் : திருவண்ணாமலை
ஆட்சி ஆண்டு :

வட்டம் : வந்தவாசி
வரலாற்று ஆண்டு : 9–ஆம் நூற்.

ஊர் : சீயமங்கலம்
இ.க. ஆண்டறிக்கை: –

மொழி : தமிழ்
முன் பதிப்பு : –

எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்

அரசு : –
ஊர்க் கல்வெட்டு எண்: 9

அரசன் : –

இடம் : தூணாண்டார் கோயில் மகாமண்டப தென்மேற்குத் தூண்.

குறிப்புரை : இக்கோயில் மகாமண்டபத்தில் இக்கல்வெட்டு அமைந்துள்ள தூணினை சூடாமணி சோழமாராயன் என்பானின் மகன் தடாமயன் என்பவனின் மணவாட்டி (மனைவி) குந்தக்க மாதேவி என்பவள் செய்தளித்துள்ளாள்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. சூடாமணிச் சோ–
3. ழ மாராயன்
4. மகனான தடா–
5. மயன் ம–
6. ண வாட்டி
7. குந்தக்க
8. ஊஷேவி

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 286/2018

மாவட்டம் :	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு :	4
வட்டம் :	வந்தவாசி	வரலாற்று ஆண்டு :	பொ.ஆ. 800
ஊர் :	சீயமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை :	131/1956–57
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	–
எழுத்து :	தமிழ்		
அரசு :	பல்லவர்	ஊர்க் கல்வெட்டு எண் :	10
அரசன் :	தந்திவர்மன்		

இடம் : தூணாண்டார் கோயில் குடைவரை முன் மண்டப இடதுபுற அரைத்தூண்.

குறிப்புரை : ஊற்றுக்காட்டுக் கோட்டத்து பெரும்பாலையூர் ஊரின் அருகில் இருந்த திருப்பாலையூர் ஊர்த் தலைவன் அடவி என்பான் கங்க குறுநிலத் தலைவன் ஸ்ரீகங்கரையர் நேர்குட்டி என்பவனின் அனுமதி பெற்று இவ்வூர் (ஏரிக்கு) மதகு ஒன்றினை அமைத்துள்ளான்.

கல்வெட்டு :

1. கோவிசைய த–
2. ந்தி விக்கிரம பரு–
3. மற்கி யாண்டு நா–
4. லவாவது ஊற்றுக்–
5. காட்டுக் கோட்டத்துப்
6. பெரும்பாலை ஊர்–
7. த் திருப்பாலையூர்
8. கிழவனடைவி ஸ்ரீ–
9. கங்கரையர் நேர்கு–
10. ட்டி பெருமானாரு வி–

11. ண்ணப்பஞ் செய்–

12. து செய்வித்தது

13. குமாரவியத் தூம்

14. பு

த.நா.அ. தொல்லியல் துறை　　　தொடர் எண் :- 287/2018

மாவட்டம் : திருவண்ணாமலை		ஆட்சி ஆண்டு :	3
வட்டம் : வந்தவாசி		வரலாற்று ஆண்டு :	பொ.ஆ. 849
ஊர் : சீயமங்கலம்		இ.க. ஆண்டறிக்கை:	68/1900
மொழி : தமிழ்		முன் பதிப்பு :	–
எழுத்து : தமிழ்			
அரசு : பல்லவர்		ஊர்க் கல்வெட்டு எண்:	11
அரசன் : நந்திவர்மன்			

இடம் : தூணாண்டார் கோயில் முன்மண்டப இடதுபுற முழுத் தூண்.

குறிப்புரை : ஊற்றுக்காட்டுக் கோட்டத்து பெரும்பாலை ஊர் அருகே உள்ள திருப்பாலையூர் ஊர்த் தலைவன் அடைவி என்பவன் கங்க சிற்றரசன் நோ்குட்டி என்பவனிடம் அனுமதி பெற்று தன் தாயார் நங்கனி நங்கையார் அவர்களின் நினைவாக (இக்குகைக் கோயிலில்) முகமண்டபம் கட்டியுள்ளான். கங்க சிற்றரசன் நோ்குட்டி என்பவன் பல்லவ மன்னனின் விசைய நந்நதிவர்மனின் ஆளுகையின் கீழ் இருந்துள்ளதை அறிகிறோம்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோ விசை–
2. ய நந்தி விக்கிரம–
3. பருமனுக்கு யா–
4. ண்டு மூன்றா–
5. வது ஊற்றுக்கா–
6. ட்டுக் கோட்டத்து–
7. ப் பெரும்பாலை
8. ஊர்த் திருப்பாலை–
9. யூர் கிழவனடை–

10. வி ஸ்ரீ கங்கரையர்

11. நேர்குட்டி பெருமானா–

12. ர்க்கு விண்ணப்பஞ் செய்து

13. அடவி தன்றாயர் நங்கனி நங்கையார்க்காக செ–

14. ய்த முகமண்டபம் இது அழியாமைக் காத்தாங் அ–

15. டி என் முடி மே–

16. ல்

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	: 26
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 933
ஊர்	: சீயமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 12

அரசன் : மதுரை கொண்ட கோப்பரகேசரி (முதலாம் பராந்தகன்)

இடம் : தூணாண்டார் கோமில் திருச்சுற்றுமாளிகை தென்கிழக்கு தூண்.

குறிப்புரை : முக்கரையர் சேதன் கொண்டி அரையர் மகன் பொரிமையன் என்பவன் இத்தூணை எடுப்பித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. மதிரை கொண்–
3. ட கோப்பர–
4. கேசரி பந்மர்கு
5. யா[ண்]டு இருப–
6. த்தாறாவது செ–
7. று முக்கரையர்
8. சேதந்
9. கொண்–
10. டி அரை–
11. யர் மக–

12. ன் பொ–

13. ரிமை–

14. யன்

15. எடுப்–

16. பி[த்தது]

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 289/2018

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	26
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	10–ஆம் நூற்.
ஊர்	:	சீயமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	13
அரசன்	:	(முதலாம் பராந்தகன்)			
இடம்	:	தூணாண்டார் கோயில் திருச்சுற்று முன்மண்டபத் தூண்.			

குறிப்புரை : பொரிமையன் என்பானின் மனைவி ஜல்லவை என்பவள் இத்தூணினை செய்தளித்துள்ளாள். பொரிமையன் என்பவன் முந்தைய முதலாம் பராந்தகன் 26–ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளான். எனவே, இக்கல்வெட்டு முதலாம் பராந்தகன் காலம் என்று கூறலாம்.

கல்வெட்டு :

1. பொரிமை
2. யன் மண
3. வாட்டி ஜல்ல
4. வை

மாவட்டம் :	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு :	
வட்டம் :	வந்தவாசி	வரலாற்று ஆண்டு :	15–ஆம் நூற்.
ஊர் :	சீயமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை :	–
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	–
எழுத்து :	தமிழ்		
அரசு :	விஜயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண் :	14
அரசன் :	–		

இடம் : தூணாண்டார் கோயில் மகாமண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : இக்கோயிலுக்கு வடக்கு உலகுடைய பிள்ளையார் கோயிலுக்கு தெற்கே உள்ள கிழக்கு மேற்காக உள்ள தெருவில் மேற்கு சிறகின் தென்பகுதியில் இருந்த 40 அடி மனை தவிர ஏனைய மனைகளும் காணியாக கொடுக்கப்பட்டுள்ளது. கல்வெட்டு முழுமையாக இல்லாததால் தானம் யாருக்கு கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியவில்லை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஊடி மகாமண்டல . . .
2. [இக்கோ]*யிலுக்கு வடக்கு உலகுடைய பிள்ளையார் கோயிலுக்கு தெற்கு மேலை–
3. ச்சிறகில் தென்கோடிய் மனையடி நாற்பது நீங்கலாக மேலைச் சிறகு கீழைச்சிற–
4. கு மனையுண்டாநதும் காணியாக சந்திராதித்தவரை காணியாக
5. அநுபவிக்ககடைவாராகவும்
6. இவை அம்மான பூஷன்
7. எழுத்து

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	சகம் 1325
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1403
ஊர்	: சீயமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை	:	–
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	: விசயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	15
அரசன்	: வீரபுக்கண்ண உடையார்			
இடம்	: தூணாண்டார் கோயில் மகாமண்டப வடக்குச் சுவர்.			

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் நாட்டு குலோத்துங்கசோழ நல்லூர் என்றழைக்கப்படும் சீயமங்கலம் தூணாண்டார் கோயிலுக்கு தேவையான நன்மைகளை புலியூர் கோட்டத்து புலியூர் வேலக்காடு ஊர்த்தலைவன் திருவொற்றியூரைச் சார்ந்த வடுகநாதர் என்பவர் செய்து வருவதால் தூணாண்டார் கோயில் நிர்வாகிகள் ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர்கள் நாள் ஒன்றுக்கு பதக்கு நெல்லும், மாதம் ஒன்றுக்கு இரண்டு பணமும், திருஞானசம்பந்தன் குறளில் (தெரு) ஒரு மனையும், தளம்பாடிபட்டு என்கிற அந்தம்பாகண்ட நல்லூர் ஊர் உழவுகாணியாகவும் அளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீமந் மஹாமண்டலெஸ்வரந் ஹரிராய விஹாடந் ஹாஷெக்குத் தப்புவராயர கண்டன் மூவ பூர்வ தக்ஷிண பஸ்சிம ஸமுத்ராதிபதி ஸ்ரீவீர ஹரிஹ–
2. ரராய குமாரர் ஸ்ரீவீரபுக்கண்ண உடையார் ப்ருதிவிராஜ்யம் பண்ணாநின்ற ஶகாப்தம் ஆயிரத்து முன்னூற்று இருபத்தஞ்சின் மேல்
3. செல்லாநின்ற ஸ்வாநு [ஸம்*]வத்ஸரத்து ரி[ஷ*]ப நாயற்று சுவரபக்ஷத்து ஏகாதஶியும் வியாழக்கிழமையும் பெற்ற அஸ்வதி நாள் ஜயங்கொ–
4. ண்ட சோழமண்டலத்து பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் நாட்டு குலோத்துங்கசோழ நல்லூரான சீயமங்கலத்தூர் உடைய நாயனார்

5. தூணாண்டார் கோயில் *ஸ்ரீ ராஜ ஸ்ரீ மாஹேஸ்வரர்* புலியூர் கோட்டத்து புலி ஊர் வேலக்காடு கிழார் திருவொற்றியூருடையார் வடுகநாதர் இந்த திரு–

6. க் கோயிலுக்கு வேண்டு[ம்] நன்மை செய்கையாலே காணி ஆழ்ச்சி ஆகக் குடுத்த கோயில் ஆடிக்கிழக்கு நாள் ஒன்றுக்குப் பதக்கு நெல்லும் மாதம்

7. ஒன்றுக்கு இரண்டு பணமும் பெறக்கடவராகவும் இதுக்கு இவற்கு மனை ஆவது திருஞாநசம்பந்தன் குறளில் வடசிறகில் தேவரடியாள் உண்ணாமுலை தாச்சி மனை–

8. க்கு கிழக்கும் பிறந்தானில் வீரன் மனைக்கு மேற்கும் நடுமனையும் குடுத்து தேவதாநம் தளம்பாடிபட்டு ஆன அந்தமபாகண்ட நல்லூர் இவற்கு உழவு காணி

9. ஆட்சியும் ஆக குடுத்தோம்

மாவட்டம்	:	திருவண்ணாமலை	ஆட்சி ஆண்டு	:	சகம் 1287
வட்டம்	:	வந்தவாசி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 1365
ஊர்	:	சீயமங்கலம்	இ.க. ஆண்டறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	விசயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	16
அரசன்	:	கம்பண உடையார்			
இடம்	:	தூணாண்டார் கோயில் மகாமண்டபம் வலதுபுற மேற்க்குச் சுவர்.			

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் நாட்டு குலோத்துங்கசோழ நல்லூர் எனும் சீயமங்கலம் ஊர் தூணாண்டார் கோயில் நிர்வாகிகளான தானத்தார் கூடிபேசி, ஏற்கனவே இக்கோயில் இறைவனுக்கு திருநாமத்துக்காணியாக வழங்கப்பட்ட நிலம் நீக்கி உள்ள ஏனைய நன்செய், புன்செய், நத்தம் உட்பட நிலங்களில் வசூலிக்கப்படும் வரிகளை தூணாண்டார் இறைவன் பூசைக்கும், 5 திருவிளக்குக்கும், கோயில் திருப்பணிக்காகவும் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், திருக்கை கோட்டி ஓதும் (திருமுறைப் பாசுரம் ஓதுவார்) பெருமாள் காங்கேயர் என்பவருக்கு மனை ஒன்றும் கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

